பக்கங்கள்: பதினாறு + II

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 07 வியாழக்கிழமை (23.07.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 239

# யாழ்.மாவட்டத்தை கட்டியெழுப்ப போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது



## கால தாமதம் காட்டாது பணியில் இறங்க பஸில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 23

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தைக் கட்டியெழும்புவதற்கு போதியளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான செயலணியின் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி தெரிவித்தார்.

அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற விதத்தில் அதிகாரிகள் பணிகளை காலம்தாழ்த்தாது செய்ய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார் - வலியுறுத்தினார்.

யாழ்.நூல்நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற செயலணியின் விசேட மாநாட்டுக்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அவர் ஏ-9 வீதியூடான பொது மக்கள் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் யாழ்.பொது நூலகத்தில் நடைபெற்ற 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டம் தொடர்பான விசேட மாநாட்டில் கலந்து கொண்டார்.

அவருடன் யாழ்.அரச அதிபர் கே. கணேஷ், அமைச்சரவை அந்தஸ்தற்ற பயணிகள் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகியவன்ன, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்டப் (16ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச்சுடர்**

**உள்ளே**

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

# மீண்டும் பிரிவினை வாதத்தை ஏற்படுத்த இந்தியாவும் மேற்குலகமும் சதி முயற்சி!

## சபையில் ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 23

வவுனியாவில் தங்கியுள்ள அகதிகளை இலக்காக வைத்து இலங்கையில் மீண்டும் பிரிவினைவாதத்தை உருவாக்க இந்தியாவும் மேற்குலக நாடுகளும் சதிமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. அகதிகளுக்கு உதவுவது என்ற போர்வையில் அரச சார்பற்ற நிறுவனங்களும் இதற்கு உடந்தையாக இருக்கின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையுடனான பேச்சுகளில் இந்தியா மீளக்குடியமர்வுக்கே முன்னுரிமை தரும்

## வெளியுறவு அமைச்சர் கிருஸ்ணா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த 3 லட்சம் தமிழர்கள் மீளக் குடியமர்த்தப்படும் விடயமே இலங்கையுடனான எதிர்கால பேச்சுகளில் மிக முக்கியமானதாக அமையும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் நடைபெறும் இந்தோ-ஆசிய அமைச்சர்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள்களின் விலைகள் குடாநாட்டில் இன்று முதல் குறைக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களின் விலைகள் இன்று வியாழக்கிழமை முதல் குறைக்கப்படுகின்றன.


வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணித் தலைவரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி. நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

யாழ்.பொது நூலகத்தில் 'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# கண்ணிவெடிகளைக் காரணம் காட்டி மீள்குடியமர்வை தாமதிக்க வேண்டாம்

## இராணுவ மயமாக்கலை நிறுத்தக் கோருகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஜூலை 23

வன்னியில் இடம்பெறும் இராணுவமயமாக் கல் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றில் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

வன்னி அகதிகள் தொடர்பாக நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

(16ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். - கொழும்பு பஸ் கட்டணம் 325 ரூபா

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பயணிகள் பஸ் சேவைக் கட்டணம் 325 ரூபாவென அறிவிக்கப்பட்டது.

ஏ - 9 வீதியூடான பயணிகள் போக்குவரத்து நேற்றுக் காலை ஆரம்பமானது. நேற்றுப் பயணத்தை மேற்கொண்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 5 பஸ்களில் 210 பயணிகள் ஏற்றப்பட்டிருந்தனர். ஒவ்வொரு பஸ்ஸிலும் தலா 42 பயணிகள் வீதம் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப (16ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று வருடங்களின் பின்னர்

# ஏ – 9 வீதி ஊடாக மக்கள் போக்குவரத்து நேற்று ஆரம்பம்; 5 பஸ்களில் கொழும்பு பயணம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணிகள் போக்குவரத்து ஏ- 9 வீதியூடாக நேற்றுப் புதன்கிழமை சுமார் மூன்று வருடங்களின் பின் ஆரம்பமானது.

வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணித் தலைவரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தனர்.

இது தொடர்பான வைபவரீதியான நிகழ்வு நேற்றுக்காலை யாழ். துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாக தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அருகில்நடைபெற்றது.

நேற்றுக்காலை 10.40 மணியளவில்





விசேட ஹெலியில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வந்திறங்கிய வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவை (16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொழும்பில் நடைபெறவிருந்த பரீட்சை ஞாயிறன்று யாழ்.பிராந்திய நிலையத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கல்வியியல் முதுமாணி கற்கை நெறிக்கான நுழைவுப்பரீட்சை எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார். மேற்படி பரீட்சை கொழும்பில் நடைபெறவிருந்தது.

இதேவேளை -

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் 2009 - 10 ஆம் கல்வியாண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்றும் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையில் சட்டமாணிக் கற்கை நெறியினைப் பயிலும் யாழ்.பிராந்திய நிலைய மாணவர்களுக்கான மீள் பதிவுகள் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)


ஊரெழு மேற்கு ஸ்ரீஅருட்கதிர்காமக் கந்தன் ஆலய

## அலங்கார உற்சவம்

ஊரெழு மேற்கு ஸ்ரீஅருட்கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை (24.07.2009) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 14 நாள்கள் நடைபெற்று 06.08.2009 தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

(86969) பரிபாலன சபையினர்.


யாழ்.மாநகரசபைக்கு கொழும்பிலிருந்து தார் ஏற்றி வருவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2009

மாநகரசபைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வந்து யாழ்.மாநகரசபைக் களஞ்சியத்தில் ஒப்படைப்பதற்கான சேவையாளர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகள் யாவும் மாநகரசபை ஆணையாளருக்கு பதிவுத்தாபால் மூலம் (31.07.2009) ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| விவரம் | ஏற்றியிறக்கல் கூலி (01பரலுக்கு) | 1 தார் பரலின் விலை |
|---|---|---|
| *1. 140 லீற்றர் கொண்ட தார் பரல்* | | |
| *2. 180 லீற்றர் கொண்ட தார் பரல்* | | |
| *3. 200 லீற்றர் கொண்ட தார் பரல்* | | |

குறிப்பு : முற்பணங்கள் வழங்கப்படமாட்டாது. தார் பரல்கள் சபைக்களஞ்சியத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னரே கொடுப்பனவு வழங்கப்படும்.

மு.செ.சரவணபவ,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## பிரதேச சபை, காரைநகர்
## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 23.07.2009 - 31.07.2009 பி.ப 2 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி :- 04.08.2009 செவ்வாய்க்கிழமை மு.ப 11

கேள்வி திறந்து பார்க்கும் திகதி :- 04.08.2009 செவ்வாய்க் கிழமை மு.ப 11.30

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் இடம் :- தலைமை அலுவலகம், காரைநகர்.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத்தரம் |
|---|---|---|---|
| 1. வடக்கு உப அலுவலக கட்டட விஸ்தரிப்பும் உட் செல்லும் படலை அமைத்தலும் | 3,000.00 | 1,120.00 | M9/C10 |
| 2. வேதரடைப்பு சனசமூக நிலையம் அமைத்தல் | 6,000.00 | 1,120.00 | M9/C10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் குறிக்கப்பட்ட இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடம் இருந்து என்னால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பத்திரத்தின் மூலப்பிரதி *செயலாளர், பிரதேச சபை, காரைநகர்* என்ற முகவரிக்கும் அதன் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு உரியகாலத்திற்கு முன்னர் பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இரா.லோகநாதன்,
செயலாளர்,
காரைநகர் பிரதேசசபை.

காரைநகர் பிரதேசசபை,
22.07.2009


## உள்ளே 5 ஆம் பக்கத்தில்

*யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளர்களின் பத்துக் கேள்விகளுக்கு பதில்கள் பகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும்*
மு.றெமிடியஸ்
*சுயேச்சைக்குழு - 2 சார்பில் போட்டியிடும்*
அ.மாணிக்கசோதி
*ஆகிய இருவரின் பதில்களும் பிரசுரமாகி உள்ளன.*


# மாவட்ட சிவில் குழுக்களை அமைப்பது குறித்து ஆராயும் கூட்டம் சனியன்று

### அமைச்சர் அளுத்கமகே தலைமையில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்.மாவட்டத்தில் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பிலான கூட்டம் மின்வலு அமைச்சரும் மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுவின் இணைப்பாளருமான மஹிந்தானந்த அளுத்கமகேயினால் நடத்தப்படவுள்ளது.

இக் கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று யாழ். அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி அலுவலர்கள், பெரும்பாக அலுவலர்கள், கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், அரச, தனியார்துறை தலைவர் கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை அலுவலர்கள், பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர், சுகாதாரப் பரிசோதகர்கள் அனைவரையும் கலந்து கொள் ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-7)

# சனி, ஞாயிறு நாள்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

## பிரதேச சபைப் பிரிவுகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஒன்றினை எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

பொலிஸ் திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளடங்கும் அளவெட்டி, சங்குவேலி, இணுவில், ஆவரங்கால், சிறுப்பிட்டி, பொலிகண்டி, அல்வாய், கச்சாய், வரணி, கரவெட்டி, துன்னாலை, கொட்டடி, யாழ்ப்பாணம், கோண்டாவில், திருநெல்வேலி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் துப்புரவுப்படுத்துதல் சிரமதானப் பணிகள் என்பன மேற்கொள்ளப்படும்.

இவ் வேலைத்திட்டங்கள் பிரதேச இளைஞர் கழகங்களின் ஊடாக செயற்படுத்தப்படும். இந்த வகையில் பிரதேசத்தில் உள்ள ஆர்வமுள்ள பொதுநல அமைப்புக்கள் இளைஞர் கழக நடவடிக்கைகளுக்கு தேவையான ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் நல்கி திட்டத்தின் வெற்றிக்கு உதவுமாறும் தேசிய இளைஞர் சேவை மன்றம் உதவி இயக்குநர் ஏ.சக்திவேல் கேட்டுள்ளார். (அ)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கில், கே.கே.எஸ். வீதியில் இருந்து 250 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) நல்ல சூழலில், சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0778146973

## தவறவிடப்பட்டுள்ளது

தே.அ.இல720471930V தவறவிடப்பட்டுள்ளது.

தொடர்பு:- ப.பாஸ்கரன்
சூரும்பகட்டி, புலோலி வடமேற்கு, புலோலி.

## பணி ஆட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கவுள்ள தையலகம் ஒன்றிற்கு தையல் வேலை தெரிந்த பெண் பணியாளர்கள் தேவை. பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்க. 26.07.2009

தொடர்பு: 0776211674, 077 2840398.

(86964)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 ★ 03 ★ 1961



மறைவு 15 ★ 07 ★ 2007

### செல்வி யோகமதி மயில்வாகனம்

ஆண்டுகள் இரண்டானாலும்
ஆறவில்லை எம் துயரம்- என்றும்
உன் நினைவில் வாடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"மதி மனை",*
*கோப்பாய்தெற்கு.*

(86968) அப்பா, அம்மா.

# மரண அறிவித்தல்கள்

## *வைத்திலிங்கம் சீனிவாசகம்* (சீனிஅப்பு)

வழக்கம்பரை, தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சீனிவாசகம் நேற்று (22.07.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்திலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (மலேசியா), சிந்தாமணிப்பிள்ளை (வட்டுக்கோட்டை) மற்றும் பொற்கொடிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேந்திரன் (லண்டன்), இராசேந்திரன் (டென்மார்க்), செல்வரதி (இலங்கை), புஸ்பறதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தியின் (2ஆம் வருட மாணவி, இராமநாதன் நுண்கலைப்பீட நடனத்துறை) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2009) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மருமகன், மகள் , பேர்த்தி.

*வழக்கம்பரை,*
*தொல்புரம்.*

## *கந்தசாமி புவனேஸ்வரி*



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடமேற்கை (திக்கம்) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி புவனேஸ்வரி 21.07.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - பாக்கியம் தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற மாணிக்கம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கம் கந்தசாமியின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கப்பிள்ளை, சிவசுப்பிரமணியம் மற்றும் தனலட்சுமி (லண்டன்), காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவனேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாமரைச்செல்வன் (சுவிஸ்), கலைச்செல்வன், ராதா ஆகியோரின் அன்புத் தாயாரும், சரவணபவான் (ஆசிரியர் - யா/நெல்லியடி ம.ம.வி), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும்,விதுரன் (யா/ஹாட்லிக் கல்லூரி ), திவாகர் (யா/ஹாட்லிக் கல்லூரி ), திவ்யா (யா/திக்கம் சி.வி.வி), கீர்த்தனா (சுவிஸ்), யாதவன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2009) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திக்கம் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கலைச்செல்வன் (மகன்).

*வட்டதெனி,*
*அல்வாய் வடமேற்கு.*

## *வேலுப்பிள்ளை கந்தையா*
### (இளைப்பாறிய வைத்தியசாலை ஊழியர் - மருதங்கேணி)

வல்லிபுரக் குறிச்சியைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தையா நேற்று மு.ப. 11 மணியளவில் வல்லிபுரக் குறிச்சியில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை - கண்ணாத்தை தம்பதியினரின் ஏகபுதல்வனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், வல்லிபுரம், வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், சரஸ்வதி, வேலுப்பிள்ளை, குணரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், ஜெயதாஸ் (UK), சக்திதாஸ் (UK), இதயசிவதாஸ் (முகாமையாளர் , ஆசிரியர் பயிற்சி நிலையம், கிளிநொச்சி), விஜிதா (UK), சுஜிதா (UK) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், கலாவதி (UK) , சறோஜினி (UK), மீனலோயினி (அதிபர், முருகானந்தம் மகாவித்தியாலயம், கிளிநொச்சி), விக்னராசா (UK), சோதீஸ்வரன் (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அர்ச்சனா, அரிகரன், திசாந்தி, மதுஷா, கீர்த்தனா, வினிதா, றமிந்தா, தட்சிதா, அர்ச்சுனு, அசோக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2009) வியாழக்கிழமை வல்லிபுரக் குறிச்சியில் மு.ப. 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்வற்கு ஆனை விழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ.இரவீந்திரன் (பேறாமகன்).

வல்லிபுரக் குறிச்சி,
புலோலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆபத்பாந்தவனாகும் பாரதம்

இலங்கை தான் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக 250 கோடி டொலர்களை (சுமார் 25 ஆயிரம் கோடி ரூபாவை) கடனாக வழங்கி உதவுவதற்கு சர்வதேச நாணய நிதியம் தற்காலிகமாகத் தீர்மானித்திருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் வாஷிங்டன் தலைமையகத்தில் நாளை வெள்ளிக்கிழமை கூடவிருக்கும் நிதியத்தின் இயக்குநர் சபை இவ்விடயத்தில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் இலங்கையின் எதிர்பார்ப்பை - விருப்பை - நிறைவுசெய்யும் தீர்மானத்தை நாணய நிதிய இயக்குநர் சபை நாளை எடுக்கும் என்பது உறுதி எனக் கொழும்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

மனித உரிமை மீறல் போக்கைக் காரணம் காட்டி, இலங்கைக்கு இந்தக் கடன் உதவி கிட்டுவதைத் தடுப்பதற்கு மேற்குலகு எடுத்த பிரயத்தனங்களை முறியடித்து இந்தக் கடனைப்பெறும் சந்தர்ப்பத்தை கொழும்பு வெற்றிகரமாகாட்டியிருப்பதாகச்சுட்டிக்காட்டப்படுகின்றது.

சரியாக இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் இத்தகைய கடன் உதவியை இலங்கைக்கு இந்தச் சமயத்தில் வழங்குவது பொருத்தமற்றது என்று வெளிப்படையாக - செய்தியாளர் கூட்டத்தில் வைத்து - அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் குறிப்பிட்டிருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

சர்வதேச நாணய நிதியக் கடன் இலங்கைக்குக் கிடைப்பதற்கு அமெரிக்கா முட்டுக்கட்டை ஏதும் போடவில்லை என்று அமெரிக்க அதிகார மட்டத்தினால் பின்னர் வெளியில் கூறப்பட்டாலும், வன்னி யுத்தத்தை ஒட்டிய விடயங்களில் இலங்கை 'எல்லை மீறி' நடந்து கொண்டமைக்காக ஏதேனும் வகையில் கொழும்புக்குப் 'பாடம் புகட்ட' வேண்டும் என்ற கருத்து நிலைப்பாடு அமெரிக்கா உட்பட்ட மேற்குலகில் இன்னும் நீடித்து வருவதையும் மறுப்பதற்கில்லை.

இதேசமயம், இந்த விடயத்தை ஒட்டி பாரிஸை மையமாகக் கொண்டு இயங்கும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் இயக்கமும் ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது.

''ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்களைக் குடித்து, அதன் மூலம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெற்றிகொண்டிருக்கும் இலங்கை, தொடர்ந்தும் ஊடக சுதந்திரத்தை மோசமாக மிதித்து, நசுக்கி வருகின்றது. எனவே, ஊடக சுதந்திரத்தைப் பேணுவோம் என்பதை இலங்கைக்கு ஒரு முன்நிபந்தனையாக விதித்து, அதற்கான உறுதியை எழுத்தில் பெற்றுக்கொண்ட பின்னரே இந்தக் கடன் உதவியை இலங்கைக்கு வழங்க சர்வதேச நாணய நிதியம் முன்வரவேண்டும்.'' - என்று அந்த அமைப்பு நாணய நிதியத்தைக் கடிதம் மூலம் வற்புறுத்திக் கோரியிருந்தது.

அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் 'அமசடக்கான' எதிர்ப்பு, எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் இயக்கம் போன்ற மனித உரிமைகளுக்கான சர்வதேசக் கட்டமைப்புகளின் ஆட்சேபனைகள் போன்றவற்றையும் மீறி இந்தக் கடன் இலங்கைக்குக்கிடைக்கும்வாய்ப்புக்கிட்டியிருக்கின்றது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உதவி இலங்கைக்குக் கிட்டுவதற்கும் மீண்டும் ஒரே ஆபத்பாந்தவன்தான் ஒத்தாசை புரிந்திருக்கின்றான் என்பதுதான் இதில் முக்கிய விடயமாகும்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இலங்கை அரசுப் படைகள் வெற்றிவாகை சூடுவதற்குப் பின்புலத்தில் முக்கிய காரணமாக இருந்தது இந்தியாவே என்பது இன்று உலகறிந்த இரகசியம்.

இதேசமயம், வன்னி யுத்தத்தின்போது இடம்பெற்ற சிவிலியன் பேரழிவு தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் சர்வதேச விசாரணை ஒன்றுக்கு மேற்குலகு முயன்றபோது, தனது 'தோழமை' நாடுகளைக் கையில் போட்டு, அதன் மூலம் அந்த எத்தனத்தை வெற்றிகரமாக முறியடித்தது கொழும்பு. அந்த நடவடிக்கையின் போதும் இலங்கைக்குத் தோளோடு தோள் கொடுத்து, ஆபத்பாந்தவனாக நின்று காப்பாற்றியது அயல் தேசமான இந்தியாதான்.

இப்போதும் சர்வதேச நாணய நிதியக் கடனும் இலங்கைக்குத் தடைகளைத் தாண்டிக் கிடைப்பதற்குக் காதோடு காது வைத்தால் போல காய் நகர்த்தி உதவியதும் இந்தியாதான் என சில சிரேஷ்ட இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

தன்னுடைய வழமையான தொடர்பாடல்கள் மூலம் இந்தியா கொடுத்த அழுத்தமே, இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் விடயத்தில் மூக்கை நுழைத்து முட்டுக்கட்டை போடாமல், அமெரிக்கா தள்ளி நின்று ஒதுங்கிக் கொண்டமைக்குப் பிரதான காரணம் என்றும் சொல்லப்பட்டது.

''இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளை மீட்டுக் கொடுக்கும் தீர்வு ஏற்பாடு ஒன்று தொடர்பில் கொழும்புடன் புதுடில்லி ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளது போலும். அந்த இணக்கப்பாட்டுக்குக் கைமாறாகவே இந்த நாணய நிதியக்கடன் இலங்கைக்குக் கிட்டுவதை இந்தியா தனது இராஜதந்திர வழிகள் மூலம் உறுதி செய்துள்ளது.'' - என்று மேற்படி சிரேஷ்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதும் அவதானிக்கத்தக்க அம்சமாகும்.

கொழும்புக்கு ஆபத்பாந்தவனாக - அநாதிரட்சகனாக - தொண்டாற்றி உதவும் பாரதம், இலங்கைத் தமிழர் பக்கமும் தனது கடைக்கண் பார்வையைத் திருப்பி நியாயம் செய்ய முற்பட்டால் பேரழிவுகளினாலும் போரழிவுகளினாலும் நலிவுற்று, சிதைவுற்று, வாடி வதங்கி நிற்கும் அந்த மக்களுக்கு ஓரளவுக்கேனும் நியாயம் கிட்ட வாய்ப்பு ஏற்படும்.

பொறுப்புணர்ந்து செயற்படுமா பாரதம்?




நேற்று இடம்பெற்ற சூரிய கிரகணத்தின்போது இணுவில் தோட்ட வெளியில் இருந்து எமது செய்தியாளர் ஒருவரால் எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: லிங்கன்)

# இலங்கை அதிபர் சேவை திறமை, மூப்பு அடிப்படையில் பதவியுயர்வு
# வடக்கு மாகாணத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறும் காலம் அறிவிப்பு

இலங்கை அதிபர் சேவை திறமை மூப்பு அடிப்படையிலான பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு நடைபெறும் இடங்களும் நடைபெறும் திகதிகளும் கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 : II மற்றும் வகுப்பு 2:I மற்றும் வகுப்பு Iஇல் உள்ள அதிபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடங்களும் திகதியும் வருமாறு:

*யாழ். கல்வி வலயம், வடமராட்சி கல்வி வலயங்களைச் சேர்ந்தவர்களுக்கு 27.07.2009 திங்கட்கிழமை யாழ். கல்வி வலயத்தில் நடைபெறும்.

*தென்மராட்சி கல்வி வலயத்தை சேர்ந்தவர்களுக்கு யாழ். கல்வி வலயத்தில் 28.07.2009 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

*தீவகம் கல்வி வலயத்தை சேர்ந்தவர்களுக்கு 29.07.2009 புதன்கிழமை யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறும்.

*வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வவுனியா தெற்கு வலயத்தில் 27.07.2009 திங்கட்கிழமை நடைபெறும்.

*மன்னார் கல்வி வலயம், மடு கல்வி வலயம், வவுனியா வடக்கு வலயம், முல்லைத்தீவு வலயம், கிளிநொச்சி வலயம்,துணுக்காய் கல்விவலயம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிபர்களுக்கு 28.07.2009 செவ்வாய்க்கிழமையும் 29.07.2009 புதன்கிழமையும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

மேற்படி தினங்களில் குறித்த கல்வி வலயங்களைச் சேர்ந்தஅதிபர்கள் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறுகல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் அதிபர் சேவைப் பிரிவு மங்கள விஜயரத்தின அறிவித்துள்ளார்.

(203-11)

# குடாநாட்டில் ரயில் பாதை புனரமைப்புக்கு கல், மண் பெறுவதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

குடாநாட்டில் ரயில் பாதை புனரமைப்பதற்கு வேண்டிய மணல், கல் போன்ற பொருள்களைப் பெறுவதற்கான இடங்களை அடையாளம் காணும் முயற்சியில் யாழ். செயலகம் ஈடுபட்டுள்ளது.

கடந்த காலஅசாதாரண சூழ்நிலைகளின்போது ரயில் பாதை அமைந்துள்ள இடங்களில் இருந்து பலரும் மண், கற்கள் என்பவற்றை கற்றி தமது சொந்தத் தேவைக்கு மக்கள் பயன்படுத்தியுள் ளனர்.

இந்த நிலையில் ரயில் பாதை அமைக்கும் தேவைக்குவேண்டியகற்கள், மணல் பெறும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன.

ஏற்கனவே குடாநாட்டில் கற்கள் அகழப்பட்டமையால் பல இடங்களில் நீர் தேங்கும் நிலமை காணப்படுகின்றது.

நிலத்தடி நீரும் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது யாழ்ப்பாணத்திற்கான ரயில் பாதை அமைக்கும் பணி காங்கேசன்துறையில் இருந்து பளை வரை முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் ரயில் பாதைக்கு வேண்டிய கற்கள், மண்விநியோகம் செய்வதற்கான முகவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுவதாக தெரியவருகின்றது.

(203 -68)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஓக. 11 இல்; தரம் 5 புலமைப் பரீட்சை ஓக. 23 இல்

கொழும்பு,ஜூலை 23

பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்புகளுக்கான 2009ஆம் ஆண்டு பரீட்சைகள் ஓகஸ்ட் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இதேவேளை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைகள் ஓகஸ்ட் 11ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர்5ஆம் திகதி வரை இடம்பெறும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் முடிவடைந்துள்ளன. ஓகஸ்ட் 23ஆம் திகதிக்கு இரண்டு வாரத்துக்கு முன்னரே பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுவிடும் என்றும் பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்றது. (ப)

# பிரசவத்தின்போது மனைவியுடன் கணவனும் தங்கியிருக்க வசதி
## ஆஸ்பத்திரிகளில் ஏற்பாடு செய்ய சுகாதார அமைச்சு திட்டம்

கொழும்பு,ஜூலை 23

தாய் ஒருவர் குழந்தை ஒன்றை பிரசவிக்கும்போது அவரது கணவனையும் பிரசவ அறையில் பிரசன்னமாய் இருப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சு ஆலோசித்து வருகின்றது.

உலகில் பல நாடுகளில் இந்த நடைமுறை அமுலில் இருந்து வருகின்றது. தாயின் பிரசவ வேதனையைக் கணவன் நேரடியாகக் காணவும் மனைவியின் வேதனையில் தாமும் பங்கேற்கும் உணர்வை ஏற்படுத்தவும் இந்தத் திட்டம் உதவும் என்று கருதப்படுகின்றது.

இலங்கையில் சில தனியார் ஆஸ்பத்திரிகளில் இந்த வசதிகள் இப்போது நடைமுறையில் இருந்த போதிலும் குறைந்த வருமானமுள்ள குடும்பங்களால் தனியார் ஆஸ்பத்திரி கட்டணங்களை எதிர்கொள்ள முடியாமல் இருக்கிறது.

எல்பிட்டிய என்ற இடத்திலுள்ள பொது ஆஸ்பத்திரியில் இப்போது இந்த வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அங்கு பிரசவத்துக்காக அனுமதிக்கப்படும் பெண்களின் கணவன்மார் தங்கியிருப்பதற்கும் அறைகள் கட்டப்பட்டுள்ளன. பிரசவத்தின் முன்பும் பின்பும் கணவன்மார் தங்கியிருந்து உதவிபுரிய அனுமதிக்கப்படுகிறார்கள். (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி 08 | 24.07.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | திருதியை பி.இ. 02.22 வரை |
| நட்சத்திரம்: | மகம் பி.இ. 01.35 வரை |
| சுபநேரம்: | 06.02 - 07.32 |
| ராகுகாலம்: | 10.32 - 12.02 |

# திஸநாயகம் வழக்கு முடிவு; தீர்ப்பு ஓகஸ்ட் 31இல்

கொழும்பு,ஜூலை23

ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக் கோவை ஆகியவற்றின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணைகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி தீபாலி விஜேந்திர முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முடிவுற்றன. தீர்ப்பு வழங்குவது ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

2006 ஜூனுக்கும் 2007 ஜூனுக்கும் இடையில் 'நோர்த் ஈஸ்ட் ஹெரால்ட்' என்ற சஞ்சிகையை அச்சிட்டு, இனவாதத்தைத் தூண்டும் கருத்துகளை அதில் எழுதி வெளியிட்டார் எனத் திஸநாயகம்மீது இவ்வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக இடம்பெற்ற பொலிஸ் விசாரணைகளின் போது திஸநாயகத்தினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலம், தம்மைப் பலவந்தப்படுத்தி, கட்டாயத்தின் பேரில் எடுக்கப்பட்டது என்றும், அதனால் அதனைத் தமக்கு எதிரான சாட்சிய ஆவணமாகப் பயன்படுத்தக்கூடாது எனவும் திஸநாயகம் சார்பில் வாதிடப்பட்டது.

அதனையடுத்து அந்த வாக்குமூலத்தை, திஸநாயகம் தாமாக விரும்பி அளித்தாரா என்பது பற்றிய 'வொயர் டொயர்' விசாரணையை மேல்நீதிமன்றம் நடத்தியது. அரசுத் தரப்பில் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் ரண சிங்க உட்பட ஏழு பொலிஸ் அதிகாரி கள் சாட்சியமளித்தனர். அந்த வாக்குமூலத்தை எதிரிக்கு எதிரான சாட்சியமாக ஏற்க நீதிமன்றம் முடிவு செய்தது.

இதனையடுத்து திஸநாயகம் சாட்சிக் கூண்டில் ஏறி வாக்குமூலம் ஒன்றை நீதிமன்றுக்கு வழங்கினார்.

அவர் சார்பில் வாசுதேவ நாணயக்கார, மனோரி முத்தெட்டுவேகம போன்றோரும் நீதிமன்றில் ஆஜராகி சாட்சியமளித்திருந்தனர்.

விசாரணை நேற்று முடிவுற்றமையை அடுத்து தீர்ப்பு வழங்குவது ஓகஸ்ட் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதய அஞ்சலி



எமது கலாமன்ற நிர்வாக உறுப்பினர்
திருமதி மோகலிங்கம் இராஜேஸ்வரி
அவர்களது பாசமிகு தந்தையார்

**அமரர் கணபதிப்பிள்ளை இந்திரன்**

அவர்களது திடீர் மறைவு அறிந்து அதிர்ச்சியடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடி சேர பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிழவன்காடு கலாமன்றம்,
காரைநகர். (86965)

நிர்வாக சபையினர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள்.

## தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

### சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்டம் (ராரப்)
### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### 'ஆ.அ. வ.' நன்கொடை இல. 0006 SRI (SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைக்கான கேள்வி அறிவித்தல் இல: 09

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்ட (TAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆ.அ.வ.) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி திருத்த வேலைக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஒப்பந்த தொகை (வரி நீங்கலாக)/ காலம் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | JF/TAARP/RD/07 | நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 1.5 கி.மீ அளவுடைய துங்காலை கிராம வீதி புனரமைத்தல் | Rs 2.22 mn / 2 மாதங்கள் | C8/M7 (வீதிகள்) | 25,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகார பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   - II) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   - III) இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   - IV) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.
   - V) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில்* பெற்றுக்கொள்ளலாம். *தொலைபேசி: 021 2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk*
6. ஒப்பந்த ஆவணங்கள் ஆடி மாதம் 23 ஆம் திகதி 2009 முதல் ஆவணி மாதம் 6 ஆம் திகதி 2009 வரை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் *தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணம்* இற்கு ஆவணி மாதம் 12 ஆம் திகதி 2009 மு.ப. 11.30 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஆடி மாதம் 30 ஆம் திகதி 2009 முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

க. கணேஷ்,
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்.
யாழ்ப்பாண மாவட்டம்.

## சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா

கோப்பாய், ஜூலை 23

அச்செழு - கொக்கிருந்தபதி அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட பெருவிழா இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஆசியுரையை மகோற்சவ குரு சிவஸ்ரீ சி.கிருஷ்ணசாமிக்குருக்களும் அருளாசியை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோரும், சிறப்புரையை வடமராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு அலுவலர் வே.அம்பிகைபாகனும் நிகழ்த்துவர்.

தேரை வடிவமைத்த சிற்பாச்சாரியர் குழுத் தலைவர் சிற்பக்கலாபூஷணம் ஸ்தபதி விஸ்வபிரம்மஸ்ரீ தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன் இதில் கௌரவிக்கப்படுவார்.

(சிறப்பு மலர் 8 ஆம் 9 ஆம் பக்கத்தில்)

(203-72)

## கொழும்பு கிருலப்பனையில் முஸ்லிம் இளைஞரின் சடலம்

கொழும்பு, ஜூலை 23

கொழும்பு, கிருலப்பனைப் பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் முஸ்லிம் இளைஞர் ஒருவருடைய சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் அண்மையில் தெஹிவளைப் பிரதேசத்தில் வைத்து காணாமற் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-சி)

## இன்று பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கையினை அமுல்படுத்தும் வகையிலும் உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்தும் வகையிலும் சாவகச்சேரி நகரசபையினருக்கான பயிற்சிவகுப்புஇன்று வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறும்.

நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும் பயிற்சி வகுப்பில் நகரசபை கணக்காளர் ம.சுப்பிரமணியம் அலுவலக நிதி முகாமை பற்றி கருத்துரை வழங்குவார்.

(அ-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

1106 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு 12 25 27 07

21-07-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 7,858,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 213,137 | 20/- | 4,262,740/- |
| 2 இலக்கங்கள் | 19,504 | 40/- | 780,160/- |
| 1 இல. + லக்கினம் | 19,304 | 60/- | 1,158,240/- |
| 2 இல. + லக்கினம் | 1,798 | 200/- | 359,600/- |
| 3 இலக்கங்கள் | 535 | 1000/- | 535,000/- |
| 3 இல. + லக்கினம் | 38 | 10,000/- | 380,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,858,975/- | - |
| மொத்தம் | | | 8,075,740/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 254,324 | | 8,575,740/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,335,150/-

ஆலிந்தயே ரண் வர்சனாவ

தங்கக்காசு வெற்றியாளர்: டீ.எம்.சீலவதி மாத்தளை
கைத்தொலைபேசி வெற்றியாளர்: பீ.ஆர்.பி.சீ.குணதிலக கடுகண்ணாவ

2009 ஜூலை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 400343784-7-31 |
| கொழும்பு | 400344733-9-29 |
| கம்பஹா | 400345480-5-25 |
| பொலன்னறுவை | 400348925-3-26 |
| மொனராகலை | 400338519-8-23 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**சுரேஸ் சிறோமியா**

அன்னை மடியில் 13*07*2001

ஆண்டவன் அடியில் 23*07*2006

ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உன் நினைவுகள் என்
நெஞ்சத்தை விட்டு அகலாதம்மா.

என்றும் பாசமுள்ள:
சுரில்சன் (தம்பி),
அப்பம்மா, சித்தப்பாமார்.

இல.05, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (86963)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை இந்திரன்



காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், கணக்கனார் கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இந்திரன் 20.07.2009 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும், நடராசா, கந்தையா, சாந்தி, இராஜேஸ்வரி, சித்திரா, ஸ்ரீகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இன்பரோசா, லலிதாம்பிகை, கோணேஸ்வரராஜா, காலஞ்சென்ற மோகனலிங்கம் மற்றும் சிவஞானம் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், நல்லையா மற்றும் மகேசன், சுந்தரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செந்தூரன், கிருஷ்ணி, தர்சனா, கிருசா, மேதரன், சஞ்சீவன், பகீரதி, கௌசல்யா, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2009) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கணக்கனார் கண்டி,*
*காரைநகர்.*

தகவல்: மனைவி,
மக்கள், மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகரசபை முதன்மை வேட்பாளர்களின் நிலைப்பாடுதான் என்ன
# 10 கேள்விகளுக்கு அவர்கள் தரும் பதில்களைப் படியுங்கள்

கேள்விகள்

| கேள்வி1: | கேள்வி 2: | கேள்வி 3: | கேள்வி 4: | கேள்வி 5: | கேள்வி 6: | கேள்வி 7: | கேள்வி 8: | கேள்வி 9: | கேள்வி 10: |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன செய்யப் போகிறீர் கள்? | மாநகர எல்லைக்குட்பட்ட வீதிகள், சில பிரதேசங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளன, இவற்றைத் திறக்க நடவடிக்கை எடுப்பீர்களா? | மக்களின் நடமாடும் சுதந்திரம் கூட கட்டுப்படுத் தப்பட்டுள்ள நிலையில் இத்தேர்தல் நடைபெறுகிறது. இது பற்றி என்ன கூறுகிறீர்கள்? | தற்போது யுத்தம் முடிவடைந்து விட்டது. இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கும் என நினைக்கிறீர்களா? | யாழ்.மாநகர சபையை அபிவிருத்தி செய்வதற் கான திட்ட வரைபு ஏதேனும் உங்களிடம் உள்ளதா? | உங்களது திட்டங்களுக் குரிய நிதி மாநகரசபையிடம் உள்ளதா? இல்லையென்றால் எவ்வாறு நிதியைத் திரட்டிப் போகிறீர்கள்? | திண்மக்கழிவு முகாமைத்து வம் தொடர் பாக தங்களி டம் ஏதேனும் திட்டம் உள்ளதா? | நீர் வழங்கல், வடி காலமைப்பு என்பன தற் போது பிரச்சி னையாக உள் ளன. இவற்றைச் சீராக்க ஏதே னும் திட்டம் தங்களிடம் உள்ளதா? | யாழ்ப்பா ணத்தில் குறிப்பாக மாநகர சபைப் பகுதியில் நிலத்தடி நீர் மாசடைந்து வருவதாக ஆய்வு கள் சுட்டிக்காட்டு கின்றன. இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? | மாநகரசபைப் பகுதி முழுவதும் இப்போது வருடம் முழுவதும் நுளம்புத் தொல்லை பெருகியுள்ளது. இதனால் டெங்கு போன்ற நோய்கள் பரவும் அபாயமுள்ளது. இது போன்ற சுகாதாரப் பிரச்சி னைகளைத் தடுப்பதற்கு ஏதேனும் திட்டம் தங்களிடம் உள்ளதா? |



## றெமிடியஸ்

பதில் 01: இந்தத் தேர்தல் இரண்டு நோக்கங்களுக்காக நடத்தப்படுகிறது. தேர்தலின் நோக்கம் அபிவிருத்தியல்ல. இந்தத் தேர்தலின் முக்கிய நோக்கம் கடந்த காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளைச் சர்வதேச சமூகத்திற்கு மறைப்பதே. இன்று ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகளும் மனித உரிமை அமைப்புகளும் வன்னிப் போரில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்பு (இனப்படுகொலை என்றும் சொல்லலாம்) குறித்து இலங்கையை வன்மையாகக் கண்டிக்கின்றன.

இத்தேர்தல் மூலம் தமிழ் மக்களின் இதயபூமி எனக் கருதப்படும் யாழ்ப்பாணத்தின் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் தமிழ் மக்கள் தன் பக்கம், தன்னைத்தான் ஆதரிக்கிறார்கள் என்று காட்ட அரசு முற்படுகிறது.

அரசு செய்த அடாவடித்தனங்களை யாழ்.மக்கள், மனதார ஏற்றுக்கொள்கிறார்கள், அதைப் பாராட்டுகிறார்கள் என்று சர்வதேச சமூகத்திற்குக் காட்டுவதற்காகவே இத் தேர்தல் நடைபெறுகிறது. வன்னியில் இடம்பெற்ற அவலத்தை யாழ்.மக்கள் ஏற்றுக்கொள்கி றார்கள் என்று உலகத்திற்குக் காட்டுவதற்காகவே இத்தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் உண்மையில் என்ன நடந்தது என்பதை உலகிற்குக் காட்டவேண்டும்.

பதில் 02: நிச்சயமாக, இனியும் இந்த வீதிகள் பூட்டப்பட்டிருப்பபதற்கான நியாயமான காரணங்கள் எதையும் அரசு முன்வைக்கமுடியாது. பூட்டப்பட்டுள்ள வீதிகளோ, பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களோ எந்த ஒரு சட்டத்திலும் பிரகடனப்படுத்தப்படவில்லை. பூட்டப்பட்டுள்ள வீதிகளை மீளத் திறப்பதற்கும், அப்பகுதி மக்களின் மீள்குடியேற்றத்திற்காகவும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுப்பார்கள். ...ற்கு மேலாக நான் ஒரு மனித உரிமை சட்டத்தரணி என்ற வகையில் மனித உரிமைச் சட்டங்களுக்கமைவாக நடவடிக்கையெடுப்பேன். யுத்தகாலத்தில் மக்களின் சுமுக வாழ்க்கையில் தலையிட்டதால் நான் தாக்கப்பட்ட சம்பவங்களையும் மக்கள் அறிவர்.

பதில் 03: உண்மையில் இத்தேர்தல் மக்களின் நன்மைக்காகவோ, அவர்களின் வாழ்க்கையை மீளமைப்பதற்காகவோ நடத்தப்படவில்லை. முழுக்க முழுக்க அரசியல் நோக்கத்துடனேயே சர்வதேச அமைப்புகளையும் உலகத்தையும் ஏமாற்றும் நடவடிக்கையாகவே தேர்தல் நடத்தப்படுகிறது. இந்நிலையில் இப்பிரதேசத்தில் மனித உரிமைகளை அனுமதித்தால் அவர்களின் நோக்கம் தோற்கடிக்கப்படும் என்பது அரசுக்காகச் செயற்படுபவர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் அவர்கள் இத்தேர்தலில் மக்களை ஏமாற்றும் முழு சட்டவிரோத நடவடிக்கைகளி லும் ஈடுபட்டுள்ளனர். இது மக்களுக்கும் நன்கு தெரியும்.

பதில் 04: தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது அரசு. இந்தியா, அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகள் உடனடியாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்தி வருகின்றன. ஆனால் இனப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க வேண்டுமென்பது தமிழ் மக்களின் ஒருமித்த கோரிக்கையில்தான் தங்கியுள்ளது.

அதாவது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் ஒரு குடையின் கீழ் ஒரேவிதமான கருத்தை முன்வைக்கவேண்டும். அவ்வாறு முன் வைத்தால் இலங்கை அரசு அதனை மறுதலிப்பது கடினம். இங்கு சில தமிழ்க்கட்சிகள் தாங்கள்தான் தமிழர்களின் நன்மைக்காகக் குரல் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் செயற்படுத்துவதைச் சிறிதளவேனும் மறுதலிக்காமல் அரசாங்கம் தருவதை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளால் எமது பிரச்சினை இன்றல்ல எந்தவொரு காலத்திலும் தீராது. இறுதியில் நாங்கள் அடிமை நிலைக்கு மாறவேண்டிய நிலையேற்படலாம்.

பதில் 05: நிச்சயமாக நாங்கள் சகல வீதிகளையும் புனரமைப்போம். சகல குளங்களையும், வடிகால்களையும் புனரமைப்போம். வீதியின் இருமருங்கிலும் பயன்தரு மரங்களை நாட்டி நகரை பசுஞ்சோலையாக்குவோம். விளையாட்டுத் திடல், களியாட்ட மண்டபங்கள் என்பவற்றையும் உரு வாக்குவோம். மழைநீரைச் சேமித்து மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றியமைப்போம்.

பதில் 06: அரச நிதி போதாவிட்டால் வெளிநாட்டிலிருந்தும், புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்தும் நிதியை நாங்கள் பெற்றுக்கொள்வோம். ஆக்கபூர்வமான முதலீடுகளை நாங்கள் ஊக்குவிப்போம்.

பதில் 07: மேலைத்தேய நாடுகள் யாவும் கழிவுகளை மீள்பாவனைக்குட்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றன. யாழ்ப்பாணத்திலும் நாங்கள் மீள்பாவனைத் திட்டத்தை அறிமுகம் செய்வோம்.

பதில் 08: இதற்கான திட்டத்தை வகுத்து அமுல்படுத்துவோம்.

பதில் 09: இவ்விடயத்திற்கு முன்னுரிமை கொடுத்து சர்வதேச அமைப்புகள் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

பதில் 10: மேலே கூறப்பட்ட விடயங்களை அமுல்படுத்தும்போது நுளம்பு தானாகவே இல்லாமல் போய்விடும்.



## அ.மாணிக்கசோதி

பதில் 01: நாங்கள் தேர்தலில் வெற்றிபெற்றாலும் பதவியேற்காமல் எமது ஆசனங்களைப் பகிஷ்கரிப்போம். அதன் மூலம் அரசியல் தீர்வுத்திட்டத்தை முடுக்கிவிடுவோம். இந்தத் தேர்தல் உலகத்தை ஏமாற்றுவதற்காக நடத்தப்படும் ஒரு தேர்தல்.

பதில் 02: யுத்தம் முடிந்துவிட்டது. 40000, 50000 இராணுவம் இங்கு தேவையில்லை. யுத்தம் முடிந்தால் இராணுவத்தினர் வீட்டுக்கு அனுப்பப்படவேண்டும். வலி.வடக்கு மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

பதில் 03: நாம் இத்தேர்தலை முற்றாக நிறுத்தவேண்டுமென இரு வாரங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்தோம். ஆனால் அரசு எமது கோரிக்கைக்குச் செவிசாய்க்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத் திறப்பு விழாவுக்கு கிராமசேவகர்கள் மூலம் மக்களைத் திரட்டி அவர்களைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத் திறப்பு விழாவுக்கு அழைத்துச் செல்கின்றனர். இப்படிப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் தேர்தல் கடமையின்போது நேர்மையாகவும் நீதியாகவும் நடந்துகொள்வார்கள் என எப்படி நாம் எதிர்பார்க்கலாம்.

எமக்கு இந்த பொலிஸ் அதிகாரிகளில் நம்பிக்கையில்லை. எனவே உடனடியாகத் தேர்தலை இரத்துச் செய்யவேண்டும்.

**செவ்வி கண்டவர்: ந.பரமேஸ்வரன்**

சுவரொட்டி ஒட்டுபவர்களை அழைத்து எச்சரிக்கை செய்யலாம். அல்லது சட்டத்தின் முன் நிறுத்தலாம். பொலிஸார் நினைத்தால் சுவரொட்டி ஒட்டும் கட்சிகளின் அலுவலகங்களுக்குள் புகுந்து சோதனை நடத்தி சுவரொட்டிகளைக் கைப்பற்ற முடியாதா? இதைச் செய்ய முடியாத பொலிஸார் தேர்தல் கடமையை ஒழுங்காகச் செய்வார்கள் என்று நம்பமுடியுமா?

பதில் 04: தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கும் எண்ணம் இந்த அரசுக்கு எள்ளளவும் இல்லை. இருக்கிற உரிமைகளையும் பறிப்பதுதான் இந்த அரசின் நோக்கம், தமிழர்களை அடிமைகளைப் போல் வைத்திருக்கவே இந்த அரசு விரும்புகிறது.

சில சலுகைகளை மட்டும் தமிழர்களுக்கு வழங்கிவிட்டு இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது எனப் பிரச்சாரம் செய்வதே அரசின் நோக்கம்.




இப்போது அரசு சர்வதேச ரீதியாக இரண்டு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண் டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது. ஒன்று இனப்பிரச்சினைத் தீர்வு. மற்றையது வன்னியில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச ரீதியான விசாரணை. இவற்றி லிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவே அரசு தேர்தலை நடத்துகிறது. புத்திஜீவி களும், இனத்தின் மீது ஆசையும் பற்றுமுள்ளவர்களும் எம்மை ஆதரிப்பார்கள் என நினைக்கிறோம்.

குறிப்பு: திரு:மாணிக்கசோதி தமது குழுவென்றால் பதவியை இராஜினாமா செய்யப்போவதாகக் கூறுவதால் மாறாக அபிவிருத்தி தொடர்பான கேள்விகள் அவரிடம் கேட்கப்படவில்லை.

# யாழ்ப்பாணம், வவுனியா தேர்தல் முடிவுகளை இலங்கை மட்டுமன்றி சர்வதேசமும் அவதானிக்கிறது

## பிரசாரக் கூட்டத்தில் ஸ்ரீகாந்தா எம்.பி.



யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை முழு இலங்கை மாத்திரமின்றி இலங்கையின் இனப்பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ள சகல நாடுகளும் எதிர்பார்த்து நிற்கின்றன. மிக உன்னிப்பாக அவதானிக்கின்றன.

தான் விரும்பும் தலைமைத்துவத்தைத் தமிழ் மக்கள் மீது திணிக்கமுடியும் என்று அரசாங்கம் போட்டிருக்கும் கணக்குக்கு எமது மக்கள் உரிய பதிலை வழங்கவேண்டும்.

இவ்வாறு நல்லூர் அரசடி வீதியில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கருத்தரங்கில் உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் என்.ராஜதேவனை ஆதரித்து நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றுகையில் ஸ்ரீகாந்தா மேலும் தெரிவித்தவை வருமாறு:

போர் முடிவடைந்துவிட்டாலும் அதன் கொடூரமான விளைவுகளால் எமது மக்கள் துன்பப்படுகின்றனர். மூன்று லட்சம் மக்கள் அரசாங்க முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

எமது மக்களுக்கு அமைதி வேண்டும்; பாதுகாப்பு வேண்டும். அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் இன்பிரச்சினை தீர்க்கப்பட்டால் மாத்திரமே அமைதியோடு கூடிய பாதுகாப்பான வாழ்வை எமது மக்கள் பெறமுடியும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றினை முன்வைக்குமாறு ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வெளிநாடுகள் வற்புறுத்தி வருகின்றன.

### ஒன்றுபட்டு நின்றால் தீர்வு

விரைவில் ஒரு தீர்வுத் திட்டம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டே ஆகவேண்டும். இந்நிலையில் ஒரே கொடியின் கீழ் நாமனைவரும் ஒன்றுதிரண்டு நின்றால் மாத்திரமே நீதியான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். நாடாளுமன்றத்தில் இருபத்திரெண்டு எம்.பிக்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கரங்களை எமது மக்கள் எதிர்வரும் தேர்தலில் மேலும் பலப்படுத்தவேண்டும். அதன்மூலம் எந்த நிலையிலும் சுயமரியாதையைக் கைவிட்டு தாம் சரணடையமாட்டார்கள் என்பதை எமது மக்கள் வெளிப்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பற்றி மக்கள் பகிரங்கமாகப் பேசத் தயங்குகின்றனர்.

மக்கள் மௌனமாக இருக்கட்டும். உங்களின் மன உணர்வுகளை நாங்கள் வெளிப்படையாகப் பேசுகின்றோம். தேர்தல் வாக்களிப்பில் மௌனமாக உங்கள் மன உறுதியை நீங்கள் வெளிப்படுத்தவேண்டும். எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வை ஜனநாயக வழியில் வென்றெடுக்க முடியும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது உரிமைகளை நாம் விட்டுக்கொடுக்க முடியாது.

### சமாதானமாகத் தீர்க்கமுடியும்

ஒரே நாட்டுக்குள் சமாதானமாகப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தோற்றம் பெற்ற 2001ஆம் ஆண்டிலிருந்து இதையே வலியுறுத்தி வருகின்றோம். தொடர்ந்தும் எமது இனம் ஒற்றுமையுடன் செயற்பட்டால் நிச்சயம் வெற்றி பெறுவோம் - என்றார்.

# இருபது வருடங்களில் இழந்தவற்றை இரண்டு வருடங்களில் கட்டியெழுப்புவோம்

## சாவகச்சேரி பிரதேச செயலக கூட்டத்தில் அமைச்சர் தேவானந்தா உரை



கடந்த இருபது வருட காலத்தில் அழிவடைந்த இப் பிரதேசத்தை அனைத்து மக்களும் ஓரணியில் திரண்டால் நிச்சயம் இரண்டு வரு டங்களில் முன்னேற்றமடையச் செய்யமுடியும். இதற்கு மக்களின் பங்களிப்பு அவசியமானதாகும். அடுத்தமாதம் நடைபெறவுள்ள யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் ஒருங்கிணைந்து மக்கள் எமது சின்னத்துக்கு வாக்களித்து எமது கரத்தைப் பலப்படுத்தினால் எமது மக்களுக்குக் கிடைக்கவேண்டிய தீர்வினைப் பெறப் பேரம் பேச முடியும்.

இவ்வாறு கடந்த 14ஆம் திகதி சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 1977ஆம் ஆண்டு ஜனநாயக வழியில் நடத்தப்பட்ட பொதுத்தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களை மக்கள் ஓரணியில் நின்று வாக்களித்ததால் 19 பேர் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அதேபோல கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் மக்களின் ஒன்றுபட்ட பங்களிப்பினால் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த 22பேர் நாடாளுமன்றம் சென்றனர். இந்தத் தேர்தல் முடிவுகள் எமது மக்களின் முழுமையான அபிலாஷைகளைப் பலத்த தென்னிலங்கை மக்களுக்கு மட்டுமல்ல சர்வதேச சமூகத்தையே வியப்படைய வைத்தது.

### ஒற்றுமையை எடுத்துக்காட்ட நல்ல சந்தர்ப்பம்

அவ்வாறான ஒற்றுமையினை மீண்டும் வெளி உலகுக்குக் காட்ட யாழ்.மாநகரசபைத் தேர்தல் ஒரு சந்தர்ப்பமாகத் திகழ்கிறது. தேர்தலில் மக்கள் எமது சின்னத்திற்கு பெரும்பான்மையான வாக்குகளை வழங்கி எமது மக்களின் விடிவுக்காகப் பாடுபடவேண்டும்.

இப்பிரதேசத்திற்கு வருகை தந்து நீண்டகாலமாகி விட்டபோதிலும் இப்பிரதேச மக்களுக்கான சேவையை எமது கட்சி உறுப்பினர்கள் ஊடாக யாழ்ப்பாணத்திலிருந்தவாறே வழங்கினேன். எமது சேவையினை அடுத்த மாதம் தொடக்கம் ஒவ்வொரு பிரதேசத்திலும் நேரடியாகச் சென்று ஆற்றவுள்ளேன். யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் மாதம் ஒரு முறை மக்கள் குறைகேள் தினமாக பிர கடனப்படுத்தி அந்தந்தப் பிரதேச மக்களின் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளேன். இடைப்பட்ட காலத்தில் மக்களின் பிரச்சினைகள் நாடாளுமன்ற அமர்வுகள் தவிர்ந்த ஏனைய நாள்களில் யாழ்ப்பாணத்திலிருந்தே தீர்க்கவுள்ளேன்.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் மக்களுக்கு பேச்சுச் சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம், உயிர்வாழ் சுதந்திரம், நடமாடும் பொதுச்சேவைச் சுதந்திரம் ஆகியவை பறிக்கப்பட்டு அண்மையில் மீண்டும் கிடைத்துள்ளன. இதனால் மக்கள் தமது சுதந்திரமான கருத்துக்களை மக்கள் குறைகேள் தினங்களில் வெளிப்படுத்தலாம். இவற்றுக்குரிய விடிவினை பெற்றுத் தருவேனென உத்தரவாதத்துடன் உறுதியளிக்கின்றேன்.

எமது மக்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தோற்றுவிட்டதாகக் கருதவேண்டாம். தற்போது எம்மைப் பீடித்திருந்த பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது. தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டிய தீர்வினைக் கொண்டு வருவதற்கு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ திடசங்கற்பம் பூண்டுள்ளார். அதற்கு எம்மால் முடிந்த பங்களிப்பினை செய்து வருகின்றோம். இந்திய அரசினால் வரவேற்கப்பட்டு சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் விரை வில் எமது மக்களுக்கு நல்லதொரு விடிவினை ஏற்படுத்தும். மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை முழுமையாகத் தளர்த்த நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் பொதுமக்கள் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளை ஏற்று ஊடரங்கு நேரம் குறைக்கப்பட்டது- என்றார். (50-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வலயப் பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடமராட்சி, வலயப் பாடசாலைகளிடையே நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன் ஒரு பகுதி கடந்த 17ஆம் திகதிய உதயனில் வெளியாகியிருந்தன.

போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**பா ஓதல் - பிரிவு - 5**

அருள்நிலா அருட்செல்வம் (வட இந்து மகளிர் கல்லூரி), அனுஷியா அற்புதராசா (மெதடிஸ்த பெ.உ.பா), சுகனியா சச்சிதானந்தம் (அம்பன் அ.மி.த.க.பா).

**இசையும் அசைவும் - பிரிவு - 1**

சங்கவி பிரதீபன் (புத்தளை ம.வி.), மதுமிதா மகிழ்ராஜ் (நெல்லியடி மெ.மி.த.க.பா.), கீர்த்தனா சந்திரபாலன் (தும்பளை சிவப்பிரகாச வித்தி.).

**இசை - தனி - பிரிவு - 2**

கிசோதா ஜெகநாதன் (மெதடிஸ்த பெ.உ.பா.),யோன் பீற்றர்லூயிஸ் செபஸ்தியன் (ஹாட்லிக் கல்லூரி), குஞ்சிதபாலன் கௌரிபாலன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**இசை - தனி - பிரிவு - 3**

கஜேந்திரன் சிவராசா (ஹாட்லிக் கல்லூரி), தவநேசன் துவாரகன் (உடுப்பிட்டி அ.மி.த.க.பா.),மகிந்தா தெய்வேந்திரன் (இமையாணன் அ.த.க.பா.), ஐஸ்வரியா தேவகுமாரன் (வட. இந்து மகளிர் கல்லூரி).

**இசை - தனி - பிரிவு - 4**

கௌசிகன் பத்மநாதன் (ஹாட்லிக் கல்லூரி),ரமணன் நந்தகோபாலன் (கற்கோவளம் மெ.மி.த.க.பா.), திவ்வியா திரவியநாதன் (ஞானசாரியார் கல்லூரி).

**இசை - தனி - பிரிவு - 5**

சுப்பிரமணியம் விசாகன் (ஹாட்லிக் கல்லூரி), ஜெயராம் தயானந் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), கௌசல்யா இராசவரோதயம் (நெல்லியடி ம.ம. வித்தி.).

**இசை குழு - I**

ஹாட்லிக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, இமையாணன் அ.த.க.பா.

**இசைகுழு - II**

ஹாட்லிக் கல்லூரி, ஞானசாரியார் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி).

**நடனம் தனி - பிரிவு - 2**

சுஜீவா சிறீபவன் (மெதடிஸ்த பெ.உ.பா), திவிஜா ருத்ரபாலன் (வட.மத்திய மகளிர் கல்.), ரஜிதா சிவபாலசுப்பிரமணியம் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நடனம் தனி - பிரிவு - 3**

நதுர்ஜா சிவநாதன் (வடமத்திய மகளிர் கல்லூரி), ஆரண்யா மெய்அழகன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), அபிநயா ஸ்ரீஸ்காந்தா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நடனம் தனி - பிரிவு - 4**

நிருஜா தங்கேஸ்வரராஜா (சிதம்பரக் கல்லூரி), ஜீவிதா அப்புத்துரை (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), தாரகா கருணைவேல் (வடமத்திய மகளிர் கல்லூரி).

**நடனம் தனி - பிரிவு - 5**

பிறேமினி பாஸ்கரன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), அருந்தஜா செல்வலிங்கம் (வடமத்திய மகளிர் கல்லூரி), சுதாஜினி பாக்கியநாதன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**நடனம் குழு - பிரிவு - 1**

மெதடிஸ்த பெ.உ.பா, வடமத்திய மகளிர் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி.

**நாட்டிய நாடகம்**

**ஆடற்கதை - பிரிவு தி.போ.**

மெதடிஸ்த பெ.உ.பா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வடஇந்து மகளிர் கல்லூரி.

**நாட்டார் பாடல் - பிரிவு - தி.போ**

ஹாட்லிக் கல்லூரி, பொலிகண்டி இ.த.க.பா, வல்வை சிவகுரு வித்தி.

**இலக்கிய நாடகம் - பிரிவு - தி.போ**

நெல்லியடி ம.ம.வித்தி, தேவரையாளி இந்துக் கல்லூரி, தும்பளை சிவப்பிரகாச வித்தி.

**கவிதையாக்கம் - பிரிவு - 4**

செல்வம் தெய்வீகன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), பவிதா விக்னேஸ்வரன் (வல்வை சிவகுரு வித்தி), பிரசாந்தினி விஜயகுமார் (கரணவாய் பொன்னம்பல வித்தி).

**கவிதையாக்கம் - பிரிவு - 5**

அம்பிகாநிதி கோகுலன் (நெல்லியடி ம.ம.வித்தி), பிருந்தா பத்மநாதன் (அம்பன் அ.மி.த.க.பா), பவித்திரா சிவராசா (விக்னேஸ்வரக் கல்லூரி), லக்சுமிப் பிரியா ஜெயச்சந்திரன் (சிதம்பரக் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம் பிரிவு - 4**

ஆதித்தியா நேசராசா (நெல்லியடி ம.ம. வித்தி), நந்தினி பிரேமதாஸ் (வல்வை மகளிர் ம. வித்தி), கஜரூபனா தியாகராசா (சிதம்பரக் கல்லூரி).

**சிறுகதை ஆக்கம் பிரிவு - 5**

பிரியந்தினி கருணாகரன் (விக்னேஸ்வராக் கல்லூரி), நிஸ்வினா ராஜஸ்ரீதரன் (தேவரையாளி இந்துக்கல்லூரி), வனிதா பொன் ராசா (ஞானசாரியார் கல்லூரி).

**வாசிப்பு - பிரிவு -1**

நிதுஷா குகனேசன் (கரவெட்டி மாணிக்கவாசகர்), மேரிறொமி தோமஸ் ஜெயசூரியா (சென். தோமஸ் றோ. க. பெ.பா), அருள்ராஜி சண்முகராசா (பொலிகண்டி இ.த.க.பா).

**வாசிப்பு - பிரிவு -2**

நிஷோபா ஜெகநாதன் (மெதடிஸ்த பெ.உ.பா), சர்மினி செந்தில்ராஜா (வட இந்து மகளிர் கல்லூரி), பேரின்பநாதன் எஸ்லராஜ் (மணற்காடு றோ.க.த.க.பா).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**கதைகூறல் - பிரிவு - 1**

வைஸ்ணவி பிரதீபன் (கரவெட்டி மாணிக்கவாசகர்), ரவிப்பிரகாஷ் விதுர்ஷன் (விக்னேஸ்வரக் கல்லூரி), டர்மி குகதாஸ் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பேச்சு - பிரிவு - 1**

ஷாமந்தி கணேசலிங்கம் (கர.மணியகாரன் தோட்ட வித்தி), நர்மிகா ரவிக்குமார் (மேலைப்புலோலி சைவ.வித்தி), வதனரூபன் உமைபாகன் (புற்றளை ம.வித்தி.).

**பேச்சு - பிரிவு - 2**

சௌமியா பாஸ்கரன் (மெதடிஸ்த பெ.உ.பா.), டர்சிகா கிருபேந்திரமூர்த்தி (வடமத்திய மகளிர் கல்லூரி), பாஸ்கரன் வினோஜன் ஹாட்லிக் கல்லூரி).

**பேச்சு - பிரிவு - 3**

சாமந்தி நித்தியானந்தம் (நெல்லியடி ம.ம.வித்தி.), கோபிகா விஜயரத்தினம் (கெருடாவில் இ.த.க.பா.), விதுர்ஷா பழனித்துரை (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பேச்சு - பிரிவு - 4**

பாலேந்திரன் சுமந்தன் (விக்னேஸ்வரக் கல்லூரி), உதயதாசன் அனுகரன் (நெல்லியடி ம.ம.வித்தி.), கலைவாணி தியாகராசா (வடமத்திய மகளிர் கல்லூரி).

**பேச்சு - பிரிவு - 5**

மதுரா அன்னலிங்கம் (வடஇந்து மகளிர் கல்லூரி), நல்லிபுரம் பிரகீத் (நெல்லியடி ம.ம.வித்தி), துளசிதா சிவராசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**பா ஓதல் -பிரிவு - 1**

பானுஜா பாஸ்கரன் (கரவெட்டி மாணிக்கவாசகர்), சாம்பவி யோகேந்திரன் (நெல்லியடி மெ.மி.த.க.பா.), சுவர்ணா சுரேஸ் (பரு. சித்திவிநாயகர் வித்தி.).

**பா ஓதல் -பிரிவு - 2**

மதன்ராஜ் மகிராஜன் (ஹாட்லிக்கல்லூரி), ஆரணி பாஸ்கரன் (மெதடிஸ்த பெ.உ. பா), விதுர்ஜா யோகேஸ்வரன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**பா ஓதல் -பிரிவு - 3**

நீலாம்பரி செல்வச்சந்திரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மாலோகன் துரைசிங்கம் (ஹாட்லிக்கல்லூரி), ஜலனி இரகுவான் (மெதடிஸ்த பெ.உ.பா).

**பா ஓதல் -பிரிவு - 4**

கோபிகா செல்வக்குமரன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கார்த்திகாயினி சக்திவேல் (மெதடிஸ்த பெ.உ.பா.), நிவேதிகா அமிர்தராசா (தொண்டைமானாறு வீ.ம.வி.).

**வில்லுப்பாட்டு தி.போ.**

வல்வை சிவகுரு வித்தி, தொண்டைமானாறு வீ.ம.வி, நெல்லியடி ம.ம. வித்தி.

**விவாதம்,தி.போ**

உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, விக்னேஸ்வரக் கல்லூரி, நெல்லியடி ம. ம.வித்தி.

**தமிழறிவு வினா விடைப் போட்டி தி.போ**

மெதடிஸ்த பெ.உ.பா, வட இந்து மகளிர் கல்லூரி, ஞானசாரியார் கல் லூரி.

**நாட்டுக்கூத்து, சிந்து நடை**

வல்வை சிவகுரு வித்தி, புலோலி மெ.மி. த.க.பா, வட இந்துமகளிர் கல்லூரி,

**இசைநாடகம்**

கற்கோவளம் மெ.மி.த.க.பா, மெதடிஸ்த பெ.உ.பா, மாதனை மெ.மி.த.க.பா.

**விசேட கூத்து**

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, விக்னேஸ்வரக் கல்லூரி.(230-236) *(முற்றும்).*


## பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.அ.தம்பித்துரை



பொ.கனிஷ்டன்

எமது கல்லூரியினை மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெறவைத்த உடற்பயிற்சியின் சிகரம்
**திரு. அ.தம்பித்துரை**
அவர்களையும் 11வயதுப் பிரிவில் மாகாண மட்டப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்ட
**செல்வன் பொ.கனிஷ்டன்**
அவர்களையும் மனமார வாழ்த்துவதில் உளமகிழ்வடைகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

## பிற்போடப்பட்டுள்ளது

24.07.2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எமது சபையின் வருடாந்த அங்கத்தவர் கூட்டம் நடைபெறும் என்று தங்களுக்கு அறியத்தந்திருந்தோம். தவிர்க்க முடியாத காரணத்தால் இக்கூட்டமானது 31.07.2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்பதை சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

கல்வாரி பூரண சுவிசேஷ தேவாலயம்,
கொக்குவில்.
தொ.பே.: 021 2222930. **நிர்வாகம்.** (சி/559810)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PACKED BY: ROYAL Industries Colombo 12 T.P. 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06.12.1922
மறைவு 14.08.2007

**அமரர் சரவணமுத்து சதாசிவம்**
(சாண்டோ மாஸ்ரர், ஓய்வுபெற்ற அதிபர்)
திதி: ஆடிபூர்வபக்க துதியை

ஆண்டுகள் இரண்டாகியும் உனது அன்புச் சிரிப்பு
எம்மை விட்டு அகலாது ஐயா!
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உன் நாமம் எம்மைவிட்டு அகலாது ஐயா!
பாசமென்னும் பாலத்தில் பயணித்த போதும்
உன் பாதங்களை என்றும் மறவேம் ஐயா!

305, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை. (87214) **பிள்ளைகள்.**

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, சிவன் அம்மன் கோயில் வீதியில் 1 ¼ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய புதியவீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: இல. 37/1 A, சிவன் அம்மன் வீதி, அம்மன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். T.P: 0776146434

## தவறிவிட்டது

"லிங்கவாசா", கே.கே.எஸ்.வீதி, இணுவில் (ஆஸ்பத்திரி முன்பாக) என்னும் முகவரியுடைய கருணானந்தராஜா பிரசாந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை, (821861500V), விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மற்றும் A.T.M. அட்டை அடங்கிய பேர்ஸ் இணுவிலுக்கும், தட்டாதெருச் சந்திக்கும் இடையில் கடந்த 18.07.2009 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 060 221 4012 என்னும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86956)

## தேவை

திருநெல்வேலியில் இயங்கும் போட்டோப் பிரதி எடுக்கும் நிலையத்திற்கு பின்வருவோர் தேவை.

*(பெண் பிள்ளைகள்)*

- கணனி இயக்குநர் - பகுதிநேரமாகவோ/ முழுநேரமாகவோ செய்ய விரும்புபவர்கள்
- போட்டோ பிரதி - முன் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவோரும்
- புத்தகம் கட்டுநர் (Binding) - முன் அனுபவமுள்ளவர்கள் மட்டும்.

தொடர்புகளுக்கு:
077 4071521, 077 5935294

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி





செல்வி அ.இந்துமதி திருமதி கி.சிவகெங்கா

| | | |
|---|---|---|
| 05.05.1968 → | தோற்றம் | → 11.04.1950 |
| 25.07.1998 → | மறைவு | → 25.07.1998 |

திதி: 23.07.2009

ஆழ்கடலில் இருவீரும் ஆறாத்துயிலில் மூழ்கியிந்நாள்
ஆண்டுகள் பதினொன்று அகன்றபடி உணர்கிலமே
ஏழ் ஜென்மம் எது தன்னில் இன்முகத்தில் விழிப்பமினி
என்றென்றும் கலங்கிறமே இனுமொருகால் உதியீரோ?

தங்கள் பிரிவால் துயர் மூழ்கும்:
கம்பர் மலை, **ஆ.கி.அருணகிரிராசாவும்**
வல்வெட்டித்துறை. (86918) **குடும்பத்தினரும்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைத் துளிகள்

★ நீ எந்த அளவுக்கு இறைவனை நம்புகிறாயோ அந்த அளவுக்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப்போகும்.
★ அறிவாளிக்கும், இயற்கையை உணர்ந்தவனுக்கும் துன்பம் வராது.
★ அடுத்தவனைக் குறை சொல்வது தன் குறைகளை மறைப்பதற்காகவே.
★ பெரியோர் போதனையை மரியாதையாய் கொள்.
★ இன்பம் வந்தபோதும் இறைவனை மறவாதிரு.
★ பெற்றோரை மதிப்பவன் வேறு பிரார்த்தனை செய்யவேண்டியதில்லை.
★ விருப்புடன் உழைத்திடு. வெற்றி நிச்சயம்.
★ ஐம்புல ஆசையை ஆண்மையால் ஆளுக.
★ முடியுமானால் பிறரை விட அறிவாளியாக இரு. ஆனால் அதை அவர்களிடம் கூறாதே.
★ அன்பைவிட சிறந்த தர்மம் ஏதுமில்லை.
★ மடையனைத் திருத்தலாம். முரடனைத் திருத்தமுடியாது.

ம.கௌசி, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## யாழின் சுடரே

கருத்தாக்கத்தால் கதிர் விடுவான் கதிரவன்
கருத்துக்களால் ஐயம் களைவான்– நம் உதயன்
அதிகாலைப் பொழுது செய்திகளைக் கூற
அனைவரின் கைகளில் தவழ்வான்– நம் உதயன்

யாவரும் அறிய யாவும் விளக்கும் நம் உதயன்
யாழ் போற்றும் தமிழ்ப் புலவன்
யாழ் மண்ணில் ஒரேயொரு சுடராய்
யாம் மகிழ பல சுடர்கள் தாங்கிவரும் நம் உதயன்.

இராசேந்திரம் நிருபன்,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## நம்பு நாளை உனதே!

* தன் நம்பிக்கை உடையவர் என்றும் தம் வாழ்வில் தாழ்ந்ததில்லை.
* எம் உள்ளத்தில் கொண்ட இலட்சியம் ஒருபோதும் குன்றிவிடக்கூடாது.
* எம்மை நாம் நம்புதல் தன்நம்பிக்கை எனப்படும். இதனால் எம் வாழ்வில் ஏற்றங்கள் உண்டாகும்.
* சிறு வயதிலேயே ஓர் ஒப்பற்ற குறிக்கோளை எம் மனதில் பதித்துக்கொள்ள வேண்டும்.பின் குறித்த வெற்றியைப் பெற முயற்சிகளைத் தொடரவேண்டும். அவற்றில் தோல்விகள் நேரிடினும் மனம் துவளுதல் கூடாது.
* நம்மால் வெற்றி பெற முடியும் எனும் நம்பிக்கையில் ஒரு சிறியதும் தளரக் கூடாது
* நம்பிக்கை என்பது மகத்தான சக்தி ஆகும்.
* ஆழ் மனத்து எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும் என்பது திண்ணம்
* நன்று கருது என்று நினைப்பது முடியும் என்றும் பாரதியார் முழங்குகினார்.
* மனம் போல வாழ்வு கிடைக்கும் என்பது ஆன்றோர் கூற்று.
* தன்னம்பிக்கையால் தரணியில் புகழ் மிகப் பெற்றவர்கள் அதிகம்.
* நாளைய நாள் மலர்வது நமது சாதனைகளுக்காகவே என நம்புவோம்.
* சோதனைகளைத் தாண்டி முன்னேறுவோம்.
* நீ வாழ்க்கையை நேசிக்கிறாயா? அப்படியானால் நேரத்தை வீணாக்காதே ஏனெனில் வாழ்க்கை நேரத்தினால் உருவாக்கப்பட்டிருக்கிறது.
* உங்களது அடுத்தவருடம், அடுத்த மாதம், அடுத்த வாரம் , அடுத்த நாள், அடுத்த மணி நேரம் உங்கள் முன்னே புது மெருகு கலையாமல் காட்சியளிக்கிறது. இது உங்களுக்கும் புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கவல்லது. நீங்கள் விரும்பினால் ஒவ்வொரு மணி நேரமும் உங்களது வாழ்வு எனும் புத்தகத்தில் ஒரு புதிய பக்கத்தைப் புரட்டலாம். ஆகவே நீங்கள் அடுத்த வாரம் அல்லது அடுத்தநாள் வரும் வரை காத்திருப்பதில் அர்த்தமில்லை.

சுபாங்கி காளிதாஸ், 63/2, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## உங்கள் நினைவாற்றலை அதிகரிக்கமுடியும்


ஜீ.ஜீவனா

[சென்றவாரத் தொடர்ச்சி....]

★ ஆர்வம் காட்டுதல்

நீங்கள் நினைவில் வைக்க விரும்புகின்ற விடயத்தின் பேரில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். அந்த விடயத்தைக் கற்றுக் கொள்வதற்கான காரணங்களை அடிக்கடி நினைவூட்டிக் கொள்ளுங்கள். ஒரு காரியத்தை முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது அது என்றைக்கும் உங்கள் நினைவில் இருக்கும் என்பதை நீங்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம்.

★ கவனம் செலுத்துதல்

நாம் சில விடயங்களை மறந்துவிடுவதற்கு முக்கிய காரணம் கவனக் குறைவு. இதைத் தடுக்க ஆர்வத்தோடு கவனியுங்கள்; முடிந்தால் குறிப்பெடுங்கள்.

★ புரிந்து கொள்ளல்

ஒரு பாடமோ அல்லது ஒரு கருத்தோ உங்களுக்குப் புரியவில்லை என்றால் அதை நினைவில் வைப்பது கஷ்டம். தகவலைப் புரிந்து கொண்டால்தான் அதிலுள்ள விடயங்கள் எப்படி ஒன்றுக் கொன்று சம்பந்தப்படுகின்றன என்பதை உடனடியாகக் கிரகித்துக் கொள்வீர்கள்.

★ ஒழுங்கமைத்தல்

ஒத்த கருத்துக்களை அல்லது ஒன்றுக் கொன்று தொடர்புடைய விடயங்களை வகைப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ ஒப்பிடுதல் அதாவது வாய்விட்டுச் சொல்லுதல்

நினைவில் வைக்கவேண்டிய விடயத்தை அடிக்கடி சத்தமாகச் சொல்லுதல்.

★ கற்பனை செய்தல்

நீங்கள் ஞாபகத்தில் வைக்க விரும்பும் விடயத்தை மனக்கண்ணில் கற்பனை செய்து பாருங்கள்.

★ சம்பந்தப்படுத்திப் பார்த்தல்

ஒரு புதிய விடயத்தைக் கற்றுக் கொள்ளும் போது உங்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயத்தோடு தொடர்புபடுத்திப் பாருங்கள்.

இப்படிச் செய்து பார்ப்பதால் நம்முடைய நினைவாற்றலை அதிகரிக்க முடியும்.

[முற்றும்]

## என் உயிர்த் தோழியே!

என் நட்புப் பாதையில்
முதன் முதலில் தடம் பதித்தவள்
நீ................
அந்த சுகமான சுவடுகளை
செதுக்கி வைத்துள்ளேன்
அழியாத சிற்பமாய்
எனக்குள்

என் தோல்விகளில்
தோழியாய் வந்து தோள் தந்தாய்
என் வேதனையில்
தாயாய் வந்து அரவணைத்தாய்
சோகங்களை உதாக்கினாய்
சுகங்களை என்னிடம் தந்துவிட்டு

செல்லச் சண்டைகள், கோபங்கள்
மழலை மொழிகள், குறும்புகள்
பள்ளியின் பசுமையான நினைவுகள்
அதில் தடம்பதித்த சுவடுகள்
நாம் இணைந்திருந்த நாள்கள்
என் உயிர் பிரிந்தாலும் – என்றும்
என் மனதில் நிலைத்திருக்கும்
அழியாத ஓவியங்களாய்....

த.றொஷின் ரேகா,
432/6, மடம் வீதி, யாழ்ப்பாணம்.

### கேள்விக்கு என்ன பதில்? -30இன் சரியான விடை

விண்வெளியில் பென்சிலால் எழுதமுடியும்.



## சிந்திக்க சில

* நம்பிக்கை நல்வழிகாட்டும், சந்தேகம் சங்கடம் தரும் - இராமதாசர்
* சரியானது எது எனத் தெரிந்த பின்னும் அதைச் செய்யத் தயங்குபவன் ஒரு கோழை - கன்பூசியஸ்
* சிந்திக்காமல் பேச ஆரம்பிப்பது குறிபார்க்காமல் செலுத்தப்படும் அம்பைப் போன்றது - ஹாலந்து
* கடமையைச் செய்வதே பெரும் புகழிற்கு வழி - டென்னிசன்
* மனத்திருப்தி இயற்கையாகக் கிடைத்த செல்வம். ஆடம்பரம் செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பஞ்சம் - சோக்ரட்டீஸ்
* ஒரு மனிதன் சிந்திப்பதுசிறந்தது. ஒரு மனிதனை சிந்திக்க வைப்பது அதனிலும் சிறந்தது - வைரமுத்து
* தற்பெருமை எங்கு முடிவடைகிறதோ அங்குதான் ஒழுக்கம் தொடங்குகிறது - ரஸ்கின்
* மகிழ்ச்சியடைவதற்கான வழி மற்றவர்களையும் மகிழ்ச்சி கொள்ளச்செய்வதே - இங்கர்சால்

வி.கீர்த்தனா, மானிப்பாய்.

### கேள்விக்கு என்ன பதில்? -30இன் சரியான விடையை எவரும் அனுப்பிவைக்கவில்லை.

## கேள்விக்கு என்ன பதில்? -32

சந்திரனில் முதன்முதல் காலடிவைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்க வீரர் என்பது எவருக்கும் தெரியும். அந்தச் சந்தர்ப்பத்தில் ஆம்ஸ்ரோங் கூறிய வார்த்தைகள் என்ன?

*(சரியான விடையை 31.07.2009இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்)*

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-......................................
முகவரி :-......................................
:-......................................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இந்த வாரம் வரலாற்றில்

**ஜூலை 17**




உலகப் புகழ்பெற்ற உள்நாட்டுப் போரான 'ஸ்பெயின் சிவில் யுத்தம்' 1936ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் திகதிதான் ஆரம்பித்தது.

**ஜூலை 18**

'அடலப் ஹிட்லர்' சர்வாதிகாரி மட்டுமல்ல; மிகச் சிறந்த எழுத்தாளருங்கூட. அவர் 1924ஆம் ஆண்டு சிறையில் இருந்தபோது 'எனது போராட்டம்' என்ற புகழ்பெற்ற நூலை எழுதினார். இந்நூலின் முதலாம் பாகம் 1925ஆம் ஆண்டு ஜூலை 18ஆம் திகதி வெளிவந்தது.



**ஜூலை 19**



ஐ.கே. புருனெல் என்பவரால் வடிவமைக்கப்பட்ட 'கிரேட் வெஸ்டேர்ன்' என்ற அதிசக்தி கொண்ட நீராவிக் கப்பல் 1838ஆம் ஆண்டு ஜூலை19ஆம் திகதி கடலில் இறக்கிவிடப்பட்டது.

**ஜூலை 20**

மனிதனின் நீண்டநாள் கனவுகளில் ஒன்று சந்திரனுக்குச் செல்லவேண்டும் என்பது. அக்கனவு நனவான நாள் 1969ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் திகதிதான். அன்றுதான் அமெரிக்கர்களான நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வேட் அல்ட்ரின் ஆகிய இருவரும் சந்திரனில் காலடி எடுத்துவைத்தனர்.



**ஜூலை 21**



புகழ்பெற்ற எழுத்தாளரான 'ஏர்ணஸ்ட் ஹிமிங்வே' என்பவர் 1899ஆம் ஆண்டு ஜூலை 21ஆம் திகதிதான் பிறந்தார்.

**ஜூலை 22**

தொழில் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டு செயற்படத் தொடங்கிய முதலாவது அணுமின் நிலையம் 'கம்பர் லாண்' பகுதியில் உள்ள 'கோல்டர் ஹோல்' ஆகும். இது 1953ஆம் ஆண்டு ஜூலை 22ஆம் திகதி கட்டப்படத் தொடங்கியது.



**ஜூலை 23**



இப்போது எல்லோருமே ஐஸ்கிறீமை 'கோன்'களில் பெற்றே உண்டு மகிழ்கின்றோம். ஐஸ்கிறீம் 'கோனைக்' கண்டறிந்தவர் 'இடாலோ மார்ச்சியானி' என்பவர். இவர் 1903ஆம் ஆண்டு ஜூலை 23இல் தனது கண்டுபிடிப்பான 'ஐஸ்கிறீம் கோனை' அறிமுகம் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்செழு - கொக்கிருந்தபதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்மன் தேவஸ்தான புதிய சித்திர

## அம்மனின் வரலாறு

எல்லோராலும் அம்பாள் கோயில் என அழைக்கப்படும் அச்செழு கண்ணகை என வழங்கும் சிவகாமி அம்பாள் ஆலயம் கி.பி 1800 முன் தோன்றியதாக கூறுகின்றனர் எம் முன்னோர்.

அம்பாள் காடுகள் அடர்ந்த கொக்குகள் நிறைந்த கொக்கிருந்தபதி என்னும் பெயருடன் தற்பொழுது இருக்கும் இடத்தில் அன்று அமைந்திருந்தார். அந்தக் காலத்தில் எம்மக்கள் விவசாயத்தினை முக்கியமான தொழிலாகக் கொண்டுள்ளபடியால் அவர்கள் விவசாயத்திற்காக ஆடு, மாடுகள் வளர்ப்பதும் அதனைக்கொண்டு சென்று மேய்த்து வரும் காலத்தில் அந்த ஆடு, மாடுகள் காடு அடர்ந்த இடத்தில் போய்ச் சிக்குண்டு கொண்டது. அதனை மீட்கச் சென்றவருக்கு இரவில் கனவில் தோன்றி அருள் ஆட்சி செய்துள்ளார். அதன்படி அவர் அங்கு பெரியவர்களாகத் திகழ்ந்த பூதத்தம்பி - மயில்வாகனம் என்ற பெருமனிதரிடம் சென்று கூறினார். அவரும் மக்களும் அதனைத் தொடர்ந்து அந்த இடத்தைத் துப்புரவு செய்து கோயில் கட்டி வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாலயம் 1818ஆம் ஆண்டு இலங்கையை ஆட்சிசெய்த ஆங்கிலேயரினால் யாழ்ப்பாணம் கச்சேரியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ஆதாரம் உண்டு. அதில் அன்று இவ்வாலயம் மண்ணினால் கட்டப்பட்டு இருநேரப் பூசைகள் நடைபெற்றதாக அதில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் தாய்க்கு அருகில் பிள்ளையார் இருக்கின்றார்.

அன்று தொடக்கம் நித்திய, நைமித்திய பூசைகள் ஆகமங்களுக்கு அமைவாக நடைபெற்று வருகின்றது என்பன கூறப்பட வேண்டியதாக உள்ளது. ஆரம்பத்தில் வருடத்தில் ஒருநாள் எல்லோரதும் திருவிழா நடைபெற்றது. பின்பு 10 நாள் அலங்காரத் திருவிழா ஆனி மாதத்தில் நடைபெற்று வந்தது. 1990களின் பின்பு கொடியேற்றத்துடன் 11 நாள் திருவிழா நடைபெற்று ஆடிப்பூரத்தில் அம்பாள் தீர்த்த உற்சவம் இடம்பெறும். அத்துடன் நிறைவாக அமையும்.

இந்த ஆலயத்தில் அடுத்த மிகப் பிரதான திருவிழாவாக நவராத்திரி பூசைகளில் பத்தாம் நாள் நடைபெறும். மானம்பூ திருவிழா வெகுசிறப்பாக பன்நெடுங்காலமாக நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து அம்மன் கோயிலுக்கு வந்து நடைபெற்று வருகின்றது. இதன்மூலம் இவ்விரு ஆலயங்களும் மிக நீண்ட வரலாற்றினைக் கொண்ட சிறப்பு அம்சங்களாக அமைகின்றது.

ஆனால் இதுவரை அம்பாள் கட்டுத்தேரில் வீதிவலம் வந்து அருளாசி பூரித்தவள். இன்று 2009 ஆடித் திங்கள் 23ஆம் திகதி வியாழக்கிழமை வெள்ளோட்டத்தினாலும் நாளை 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை அம்பாள் சித்திரத்தேர் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார் என வேண்டுகின்றோம்.

**பரிபாலன சபையும் தேர்த்திருப்பணிச் சபையினரும்.**

## நல்லை ஆதின முதல்வரின் அருளாசி



அச்செழு-கொக்கிருந்தபதியில் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் சிவகாமி அம்பாளுக்கு, புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் திருவீதி உலா இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலய விழாக்களில் இரதோற்சவம் மிகவும் சிறப்புடையது. அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான ஒளியை ஏற்றுகின்ற விழாவாகும். இதனையே நமது சமயம் ''தேரின் வடம் பிடித்தால் வானத்தில் இடம்பிடிக்கலாம்'' என வகுத்துள்ளது. இதனை உணர்ந்த அச்செழு வாழ் மக்கள் வரலாற்றுச் சின்னமாகிய தேரை சிவகாமி அம்மனுக்கு பிரதிஷ்டை செய்துள்ளனர். பல தத்துவங்களைக் கொண்டது தேர். இதனை படைப்பவர்களைத் தேவசித்திகர் என்பர். இவர்களால் படைக்கின்ற படைப்பு இறைவனுக்கு அர்ப்பணமாகின்றது என்பது தெய்வீகக் கருத்து. இதனால் படைத்தவர்களும், படைப்பிப்பவர்களும் புண்ணியத்துக்கு ஆளாகின்றனர். அச்செழு பிரதேசம் பல ஆலயங்களையும், கல்விமான்களையும் கொண்ட ஊராகும். இங்கு இப்பணி நடைபெற்றிருப்பது கண்டு அனைத்து மக்களும் மகிழ்ச்சி அடைகின்றனர். இதனைச் செய்த ஸ்தபதி விஷ்வ பிரம்மஸ்ரீ தம்பிப்பிள்ளை ஸ்ரீதரசன் அவர்களையும், சிற்பாசிரியர்களையும், ஆலய பரிபால சபையினரையும், புண்ணிய கருமத்தைச் செய்த அனைத்து உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. இப்பணி இனிதே நிறைவு பெற்றமைக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

## அடியவர்கள் மனம் உருக அள்ளித்தரும் அச்செழு அம்மன்



அச்செழு அம்மன் ஆலயமானது மிகவும் வரலாற்று புகழ்மிக்க ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இது பண்டைய காலந்தொட்டு கண்ணகி அம்மன் என வழங்கப்பட்டு 1985ஆம் ஆண்டிலிருந்து இதன் மூலமூர்த்தி சிவகாமி என அழைக்கப்பட்டு வருகின்றது. இங்கு எழுந்தருளி இருக்கும் அம்மன் அடியவர்களுக்கு அருள்பாலித்தவண்ணம் உள்ளாள். ஒரு விருட்சத்தின் கீழ் இருந்த சிறிய ஆலயம் இன்று தலவிருட்சம் நிறையப்பெற்ற திருவருள் மிக்க ஆலயமாக விளங்கி நிற்கிறது என்றால் மிகையாகாது. இதற்கென சென்ற காலங்களில் தீர்த்தக்கேணி அமையப்பெற்று இன்று சித்திரத்தேர் ஓட இருக்கும் கைங்கரியம் நிறையப்பட்டுள்ளது. மக்கள் பணியில் வரலாற்று நிகழ்வாக இடம்பெறும் "இவ்வெள்ளோட்டம் சிறப்பதோடு இப்பணி சிறக்க அனைத்து வழிகளிலும் உதவிய அனைவருக்கும் சுபீட்சமும் அருளாசியும் கிடைக்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

''அம்மன் அருள்பெற்று வாழ்வு என்றும் சிறக்கட்டும்''

வே.நடராசா, தலைவர்,
அச்செழு அம்மன் பரிபாலனசபை.

## சிவகாமித்தாயின் சித்திரத்தேர் சிறக்கட்டும்




''அச்செழுவில் வந்திருந்த
ஆயிடையாள் வழிநடந்து....''

என நூல்களிலே சிறப்பித்துக் கூறப்படும் வரலாற்று புகழ்கொண்ட கண்ணகி என வழங்கும் சிவகாமி அம்மன். வலிகாமம் கிழக்கில் அச்செழு கொக்கிருந்த பதிதனில் வீற்றிருந்து வெவ்வினைகள் எல்லாம் நீக்கி அருள்பாலித்த வண்ணம் இருக்கிறாள். இவ் ஆலயத்தை முன்னர் அலங்காரத் திருவிழாவே அலங்கரித்தது. தற்போது ஆலயத்தின் பரிநாமம் மூர்த்தி, தலவிருட்ஷம், தீர்த்தம் என்பன அமையப்பெற்று கொடியேற்ற கைங்கரியம் நடைபெற்று நிறைவருள் கிடைக்க கைகூடியுள்ளது. இவ் ஆலயத்திற்கு 2008ஆம் ஆண்டு தைப்பூச நாளில் தேர்ப்பணி ஆரம்பிக்கப்பட்டு எம்பெருமாள் ஆயகலைகள் அத்தனையுடனும் எழுந்தருளப் பெற்ற தேரிலே நாளை பவனிவர இருக்கிறாள். இதன் முதல் நிகழ்வாக இன்று புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுகின்றது. இப்பணி சிறக்க வாழ்த்துவதுடன் இப்பணியானது அம்பிகை அடியவர்களது அடிமனதில் கருவூலமாக அமைந்த எண்ணம் இன்று திருவுளமாக வண்ணம் கொண்டுள்ளது. இப்பணி சிறக்க உளம் தளராது உதவிய அனைத்து நெஞ்சங்களுக்கும் அம்மன் அருள் கிடைத்து வளம்பெருக வேண்டும் என இறைவனை வேண்டிநிற்கிறேன்.

இந்நாளில்.... .
தேர்ப்பணி நிறைந்து
வெள்ளோட்டம் சிறந்து
மக்கள் மனம் மலர்ந்து
அம்மன் அருள் பிறந்து
ஓங்கட்டும் சிவகாமித்தாய் புகழ் எங்கும்.

ம.சசிக்குமார், செயலாளர்,
அம்மன் சித்திரத்தேர்த் திருப்பணிச்சபை.

## 23.07.2009 வியாழக்கிழமை நல



நிகழும் மங்களகரமான விரோதி வருஷம் ஆடி மா
வியாழக்கிழமை ஆயிலிய நட்சத்திரமும் சித்தாமி
12 மணி முதல் 1 மணிவரையுள்ள சுபவேளையி
அச்செழு சிவகாமி அம்பாளுக்கு புதிதாக நி
பாடுகளுடன் கூடிய சித்திரத்தேர் வெள்ளோட்ட வி
யுள்ளது. அம்பாள் அடியார்கள் அனைவரும்
மாறு வேண்டுகின்றோம்.

### நிகழ்ச்சி நிர

இறைவணக்கம்
ஆசியுரை
சிவஸ்ரீ சி.கிருஸ்ணசாமி குருக்கள் (

அருளாசி:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

சிறப்புரை: திரு.வே.அம்பிகைபாகன் (M.Phil)
தேரிலக்கண மரபில் சிவகாமி அம்பாள் கலைத்தேர்
(செயற்திட்ட அலுவலர் முறைசாராக் கல்விப்பிரிவு, வடமராட்சி)

வர்ணனை: சிவத்தமிழ் சொல்லழகர் திரு.ச.லலீசன் அவர்கள்
(அதிபர், யா/ கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை)

(அதிபர்

(ஆசிரி

வாரீர், வாரீர் சித்தம் கண்கு
சிவகாமி அம்பாளின் திருத்தேர் வெ

கொக்கிருந்தபதி,
அச்செழு.


**வெள்ளோட்ட விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:**

**அம்பாள் ரேடர்ஸ்**
324, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**நித்திய கல்யாணி நகைமாடம்**
205/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பாள் பல்பொருள் வாணிபம்**
புத்தூர் வீதி, அச்செழு.

**கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
201, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**சண்முகன் களஞ்சியம்**
308, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மைதிலி நகை மாடம்**
89, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மயூரி இரும்பகம்**
குறுக்குறோட், நீர்வேலி வடக்கு.

**அம்பாள் களஞ்சியம்**
183, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**அம்பிகை களஞ்சியம்**
இல.304, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

**சாரங்கா நகைமாடம்**
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
55, Sea Street, கொழும்பு.

**திருக்குமரன் கட்டப்பொருள் விற்பனை நிலையம்**
கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**
இல.344, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

**சுந்தர்சன்**
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**கண்ணன் பல்பொருள் வாணிபம்**
புன்னாலைக்கட்டுவன் வீதி, அச்செழு.

**மாயவன் பல்பொருள் வாணிபம்**
புத்தூர் வீதி, அச்செழு.

**வேணி களஞ்சியம்**
165, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**பெஷன் ஹவுஸ்**
203, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**நந்தன் பல்பொருள் வாணிபம்**
புன்னாலைக்கட்டுவன் வீதி, அச்செழு.

**மதூர் டீசல் எஞ்சினியேர்ஸ்**
82, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும்
# ...த்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர்

...ிழமை நண்பகல் 12.00 மணி



...ருஷம் ஆடிமாதம் 07 ஆம் திகதி (23.07.2009)
...ிரமும் சித்தாமிர்தயோகமும் கூடிய நண்பகல்
... சுபவேளையில் எம்பெருமாட்டி அருள்மிகு
...ிதாக நி...ணிக்கப்பட்ட சித்திரவேலைப்
...ெள்ளோட்... விழா நடைபெற திருவருள் கூடி
...அனைவரும் ஒன்றுகூடி வந்து அருள்பெறு

## ...ழ்ச்சி நிரல்

...றவணக்கம்
...ஆசியுரை
...ாமி குருக்கள் (மகோற்சவ குரு)

செஞ்சொற் செல்வர்
ஆறு-திருமுருகன்
(அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

சிற்பாசாரியார் கௌரவிப்பு
சிற்பக்கலாபூஷணம் ஸ்தபதி
விஸ்...பிரம்ம ஸ்ரீ தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன்

நன்றியுரை
திரு.ம.சசிக்குமார்
(ஆசிரியர், யா/அத்தியார் இந்துக்கல்லூரி)

...தம் கண்குளிர வைக்கும்
... திருத்தேர் வடம்பிடிக்க வாரீர்

தேர்த் திருப்பணிச்சபை,
ஆலய பரிபாலனசபை.

## எல்லார் மனங்களிலும் ஆன்மீகம் நிலைத்து நிற்குக.... !

### நித்திய குருவின் ஆசிச் செய்தி



உலக மாதாவாகிய அன்னை பராசக்தி பல இடங்களிலும் பற்பல திருநாமங்களைக் கொண்டு வீற்றிருந்து ஆன்மாக்களுக்கு திருவருள் பாலிக்கின்றாள். யாழ்ப்பாணம், அச்செழு, கொக்கிருந்தபதி என்னும் ஸ்தலத்தில் சிவகாமி என்னும் திருநாமம் கொண்டு கிழக்கு நோக்கி வீற்றிருந்து அடியார்களுக்கு திருவருள் பாலிக்கின்றாா்.

இந்த ஸ்தலத்தில் பல ஆண்டு காலமாக நித்திய பூசைகளைச் செய்கிறேன். 55ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எனது குருபணியை நடத்திக் கொண்டு இருக்கின்றேன். இந்த ஆலயத்தில் மூன்று கும்பாபிஷேகங்களைக் கண்டு மகிழ்வுற்றேன்.

மிகச் சிறிய ஆலயமாக இருந்த இந்த ஆலயம் இன்று புதுப்பொலிவுடன் வளர்ச்சி அடைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு தீர்த்தக் கேணி அமைக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு ஆலயம் முன்னேறியுள்ளது. எல்லாம் சிவகாமி அன்னையின் அருள்தான். புதிய சித்திரத்தேரில் அம்பாள் பவனி வந்து இன்றைய கால கட்டத்தில் மக்கள் படும் துயரங்கள், அனர்த்தங்கள் அனைத்தும் நீங்கி அனைவரும் இன்புற்று வாழ சிவகாமி அன்னை தனது அருள் மழை பொழிவார்.

மேலும் ஆலயம் வளர்ச்சி அடைய சிவகாமி அன்னையை வேண்டுகிறேன். எல்லோர் மனதிலும் ஆன்மீகம் நிலைத்து நிற்க எல்லாம்வல்ல அம்பிகையின் திருப்பாதங்களை வழுத்தி எல்லா அடியார்களுக்கும் ஆசி கூறி அமைகின்றேன்.

''லோகா ஸமஸ்தா ஸு கினோ பவந்து''

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆலய நித்திய குரு, கு. சிதம்பரேவரசர்மா, சிவகாமி அம்மன் ஆலயம், அச்செழு.

## மஹோற்சவக் குருவின் நல்லாசிகள்



யாழ்ப்பாணத்தில், அச்செழு கொக்கிருந்த பதியில் வாழ் சைவ மக்களினதும் எங்களினதும் குல தெய்வமாக மிளிரும் அன்னை சிவகாமி அம்பாள் அருள் பாலித்துக் கொண்டுள்ளார். அன்னையின் அருளால் 2004 ஆம் ஆண்டு மஹாகும்பாபிஷேகமும் தெய்வீக அருளால் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

விநாயகப் பெருமானும் ஆலயத்துக்கு வலது புறத்தே அமைந்திருக்கும் அன்னையின் ஆலயம் ஆதியில் கண்ணகை அம்பாளின் கன்னிதியத்தில் அமைந்திருந்தது. தற்போது சிவகாமி அம்பாள் மூலாலயத்தில் கொலுவிருந்து அருள் பாலிக்கப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரத் தேர் விழாவும் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. நாட்டின் சூழலால் பாதிப்புற்ற வேளையிலும் கிராம மக்கள் ஒன்று சேர்ந்து , இணைந்து பெருமுயற்யினால் புதிய சித்திரத் தேரும் அமைக்கப்பட்டது. இந்த விழாவைக் கண்ணாரக் கண்டு மனதார அனுபவிப்பதே பெரும் பேறுஆகும். மஹா கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்து இன்று புதிய சித்திரத்தேர்த் திருவிழாவையும் நடத்தி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் சித்திரத் தேர் விழாவின் பலனால் அச்செழு வாழ் மக்களும் அயற் கிராம மக்களும் பக்தப் பெருமக்கள் எல்லோரும் கல்வி, தொழில் அனைத்திலும் சிறப்படைந்து இன்பம் பெருக மகிழ்ச்சியோடும், நிம்மதியோடும் வாழ்வதற்கு அம்பாளின் திருவருள் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

மகோற்சவ சிவாச்சாரியார், கிரியா கலாமணி, ஆத்ம பிரதிஷ்டாவித்வஜோதி,
கிரியாரத்தினம், ஆகமகலாசூரி, சிவாகமக்கிரியா விற்பன்னர்.
''சைவாகமஜோதி, பிரம்மஸ்ரீ சி.கிருஸ்ணசாமி குருக்கள்,
புன்னாலைக்கட்டுவன்.

## 'அம்மன் அருள் அவனி எங்கும் பரவட்டும்



வலி. கிழக்கில் நீர்வளம் நிலவளம் நிரம்பப் பெற்ற அச்செழுவின் கொக்கிருந்த பதியில் கொழுவிருக்கும் தெய்வம் கண்ணகி என வழங்கும் சிவகாமி அம்மன் ஆகும். இக் கோயிலை மனதார வழிபடு வோர் அருள் கிடைத்து மகிழ்வுறுவார். இவ்வாலயம் இன்று புதிய சித்திரத்தேர் ஓட்டமான வெள்ளோட்ட நிகழ்வை காணுவதையிட்டு பெரும் மகிழ்ச்சி புளகாங்கிதம் அடைகின்றோம். சித்திரத்தேரானது நிறை பொலிவுடன் திகழ்ந்து இறையருள் கிடைக்க வேண்டி நிற்கிறேன். அடியவர்கள் நிதி உதவி நல்கி அயராது தொண்டாற்றி இன்று சித்திரத் தேரினை காணும் பாக்கியம் பெற்றுள்ளனர். எனவே நடைபெறும் இவ் வெள்ளோட்ட நிகழ்வு சிறந்து அடியவர் மனம் நிறைந்து வாழ என்று நன்றிகளையும் கூறி இறையருள் வேண்டி நிற்கிறேன்.

திருநாவுக்கரசு, பொருளாளர், அம்மன் கோயில் பரிபாலனசபை.

## செஞ்சொற்செல்வரின் ஆசிச் செய்தி



நிலவளமும் நீர்வளமும் மலிந்த சிறப்புத் திருவூர் அச்செழு. இப் பதியில் உறைந்துள்ள கண்ணகை அம்மன் என அழைக்கப் படும் சிவகாமி அம்பாளின் புதிய திருத்தேர் வெள்ளோட்டம் குறித்து ஆசிச் செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன்.

பேசாப் பொருளைப் பேசவைக்கும் பெருங் கலைஞர்கள் சிற்பத்துறை சார்ந்த வித்தகர்கள். இவர்களின் கைவண்ணத்தில் கருணை வளமும் கலை வளமும் பெருகிறது என்றால் மிகையாகாது. அச்செழு கிராமத்து மக்களின் நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறுகிறது. எல்லா அடியவர்களும் ஒன்று கூடிச் செய்த அற்புதத் தொண்டு. அழகான இப் புதிய சித்திரத்தேரை காலமெல்லாம் காத்துப் பேண வேண்டியது அடியார்களின் தலையாய கடமையாகும். இப் புனித கைங்கரியத்துக்காக உழைத்த அனைவரையும் வாழ்த்துகின்றேன். வணங்குகிறேன். எல்லாம் வல்ல தாயாரின் திருத்தேர் விழாவோடு எம் மண்ணில் நல்லன நடைபெறப் பிரார்த்தித்து அமைகிறேன்.

அம்பிகையைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்.

ஆறுதிருமுருகன், தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## அகிலம் எல்லாம் காத்தருளும் சிவகாமி அம்பாளுக்குச் சித்திரத்தேர்



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அன்னை சிவகாமி அம்பாள் வீதியுலா வருவதற்கு உருவாக்கபட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று இடம்பெற இருக்கின்றது.

சித்திரத்தேரினை உருவாக்குவதற்கு அன்னை சிவகாமி அம்பாள் எமக்குத் தந்த அரிய சந்தர்ப்பத்தில் திறம்பட உருவாக்கப்பட்ட சித்திரத்தேரில் அம்பாள் எழுந்தருளி காட்சி தரும் பெரும் பேற்றை காண்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும்.

நீர்வளம் செழித்து விளங்கும் அச்செழுபதியினில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அன்னை சிவகாமி அம்பாளுக்கு அவர் தம் அடியவர்களின் நிதியினைக் கொண்டு சிறப்புற அமையப் பெற்ற சித்திரத்தேரில் அம்பாள் வீதி உலா வந்து அருள்பாலிக்க உள்ளார்.

அம்பாளுக்கென சித்திரத்தேர் ஒன்று உருவாக்க அச்செழுவாண் அடியவர்களின் விடாமுயற்சியில் அமையப்பெற்ற சித்திரத்தேரில் அம்பாள் வீதி உலா வந்து அவர்களுக்கு அருள் பாலிக்க வேண்டும் என வாழ்த்தி தேரினை உருவாக்க எமக்கு உறுதுணையாக நின்ற எமது சிந்துஜா சிற்பக் கலைக்கூட கலைஞர்கள் அனைவருக்கும் மற்றும் பலவழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

அகிலலோக நாயகி அன்னை சிவகாமி அம்பாள் தேர் ஏறிவந்து அருள் மழை பொழிய வேண்டும் மென வாழ்த்துகின்றோம.

ஸ்தபதி விஸ்வப்பிரம்மஸ்ரீ
தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன், கொழும்பு.

கஜமுகன் ஹாட்வெயர்
147,149 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பவானி களஞ்சியம்
கிளைகள்: இராச வீதி, நீர்வேலி வடக்கு.
ஸ்ரீ மகா விஷ்ணு, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கஜமுகா ரேட் சென்ரர், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

வினோ நகைப் பூங்கா
177/4 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ரூபா பன்முக வர்த்தகம்
104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

SV முருகேசு
மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவலைகள்



கண்ணில் பட்டது 07 ▪ 06 ▪ 1944

விண்ணில் தொட்டது 23 ▪ 06 ▪ 2009

எங்கள் இல்லத்தின் ஒளி விளக்காய் நின்று ஒளி தந்த
அன்புக்கும் அமைதிக்கும் உறைவிடமான அன்னை
தீர்க்க சுமங்கலி
அமரர் **முத்தும்மா தங்கவேலு** அவர்கள்
பாசத்தின் வடிவமதாய் பார்த்
திருந்த தாயே! நீரோ
சுவாசத்தின் வடிவமதாய் தினம்
நம்மவரின் நெஞ்சங்களில்
வாசம் கொண்ட விடிவிளக்கே – நம்
நேசம் விட்டுப் போய் விடுமா?
தேசம் விட்டுந்தன் தேகமே போனது – எம்மில்
தேயாது நின் நினைவலைகள்...

**நெல்லியோடை,**
**சர்வோதய வீதி,**
**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

**அன்னையைக் காணும்:**
**அப்பா, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கோப்பாய் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு யாழ்.பாதுகாப்புப் படையினர் உணவு மற்றும் பாடசாலைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க, 57ஆவது இராணுவ தலைமை அதிகாரி பிரிகேடியர் ஜெயசுந்தர, பிரிகேடியர் ருக்மால் டயஸ், கேணல் வஜிர சமந்த ஆகியோர் பொருள்களை வழங்குவதையும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை23

அளவெட்டி மேற்கு ஆதிகாளி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணியளவில் பொங்கலுடன் விழா நிறைவு பெறவுள்ளது. நாளை மறுதினம் சனிக்கிழமை ஆடிப்பூரத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை23

நாவற்குழி சித்திரவேலாயுதர் ஆலயத்தில் 108 சங்காபிஷேக நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும், பிற்பகல் 2 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை23

சண்டிலிப்பாய், கல்வளை வீதியில் உள்ள காளிஅம்பாள் ஆலயத்தின் ஆடிப்பூரத் தினவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 11மணியளவில் விசேட அபிஷேக ஆராதனைகளுடன் இடம்பெறவுள்ளது. (9)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை23

சங்கானை, செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்த் திருவிழாவும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை23

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது. (204)

# கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

அரியாலை கிழக்கு, நாவலடி வரையுள்ள நெற்காணிகளில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ளோர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆனந்தன் வடலி வீதியில் அமைந்துள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் பதிவுசெய்த நெற்பயிர் செய்கையாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 23

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பிரதேச மட்ட கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி.மேற்குப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என வலி.மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## நெல்லியடி பஸ் நிலையத்திலுள்ள அஞ்சல்பெட்டியருகில் செல்லமுடியவில்லை

உடுப்பிட்டி, ஜூலை23

நெல்லியடி பஸ்நிலையத்தில் அமைந்துள்ள அஞ்சல் பெட்டிக்கு அருகில் பயணாளிகள் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அஞ்சல் பெட்டியைச் சுற்றிவர வாகனங்கள் நிறுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் அப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடான செயற்பாடுகளும் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203- 155)

# இரண்டு வழிகள்

*உனது கடமைகளைச் செய்வதில் இரு வழிகள் உண்டு.*

*ஒன்று அபேக்ஷா: பலன்களுக்கு ஆசைப்பட்டு செய்தல், இது உலகியல் வழி. மற்றொன்று*

*நிரபேக்ஷா: எந்தப்பலனையும் தான் அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையில்லாமல் செய்தல்.*

*அபேக்ஷை என்பது மாரகம்.*

*நிரபேக்ஷை என்பது தாரகம்.*

*மனிதன் இந்த இரு வழிகளிலும் செல்கிறான். ஓர் உதாரணம் எடுத்துக் கொள்வோம். ஒரு கல்லூரித் தலைவருக்கு ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு மாற்றல் ஆகிறது. அவர் இப்போதுள்ள கல்லூரியில் முதல்வராக இருக்கும்வரையிலும் மரச்சாமான்கள், சோதனைக் கூடங்களில் உள்ள கருவிகள், அவற்றின் உபகரணங்கள், இவற்றிற்கெல்லாம் பொறுப்பாகிறார். மாற்றலாகும்போது, தன்னுடன் இவற்றைக்கொண்டு செல்லலாகாது. ஏனெனில் இவை அரசாங்கத்துக்குச் சொந்தமானவை. ஆனால் தான் வாடகைக்கு எடுத்த வீட்டைக் காலி செய்யும்போது, அங்குள்ள எல்லாவற்றையும் ஒரு லொறியில் ஏற்றி, புது வீட்டுக்குக் கொண்டு செல்கிறார். பழைய செருப்புகள், விளக்குமாறுகள் போன்றவைகளைக்கூட விட்டுச் செல்வதில்லை. கல்லூரியில் உள்ள விலையுயர்ந்த பொருள்களை மகிழ்ச்சியுடன் விட்டுச்செல்லும் அதே நபர் வீட்டிலிருந்து எல்லாவற்றையுமே எடுத்துச் செல்கிறார். 'இவை எனது' என்ற உணர்வே அவரை எடுத்துச் செல்லத் தூண்டுகிறது. பற்றுதலுடன் தொடர்பு கொண்டதற்கு மாரகம் என்று பெயர். பற்றுதல் இல்லாது விட்டுச் செல்வதற்குப் பெயர் தாரகம். கல்லூரியில் உள்ள பொருளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளும் காவலனாக, தற்காலிக டிரஸ்டியாகத்தான் அவர் இருந்திருக்கிறார்.*

*இதுபோல, உலக சம்மந்தமான தனது கடமையைப் பற்றுதல் இல்லாது ஒருவன் செய்ய வேண்டும். பற்றுதல் காரணமாக நீ செயல் புரிந்தால் நீ பிரமையில் ஆழ்ந்திருக்கிறாய். தாரக தத்துவத்தை நீ புரிந்துகொள்ள வேண்டும். இயற்கையின் பொருள்களை, பய னுள்ள வகையில் பயன்படுத்து. அதே சமயம் அது தற்காலிகமானது என்பதையும், அவற்றை நிரந்தர உடைமையாக்கிக் கொள்ள இயலாது என்பதையும் மறவாதே. இந்த வெளியுலகில் வாழும் போது, பற்றுதலுக்கு அடிமையாதல் ஆகாது. அது உனக்கு சஞ்சலத்தையும், அமைதியின்மையையுமே கொண்டுவரும்.*



சாயி சிந்தனை

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 23

உடுவில் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கோழிகள், கோழிக் கூடுகள், நீர் இறைக்கும் இயந்திரம், சைக்கிள், நுளம்பு வலைகள், மூக்குக் கண்ணாடிகள் போன்ற பொருள்கள் என்பவற்றை சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார். உடுவில் பிரதேச செயலகத்திற்கு அண்மையில் விஜயம் செய்தபோது இவ்வாறான பொருள்கள் அமைச்சரால் வழங்கப்பட்டன.

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்ட சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை உடுவில் பிரதேசசபைச் செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், மற்றும் கிராம அலுவலர்கள், அலுவலக ஊழியர்கள், சமுர்த்தி அலுவலர்கள், வெளிக்கள அலுவலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களும் வரவேற்றார்கள்.

இவர்களுடன் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி.குமாரவேலுவும் இணைந்து பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களும் வரவேற்பில் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் 511ஆவது படையினரின் கட்டளைத் தளபதி, உதவிப் பிரதேச செயலாளர் அ.சோதிநாதன், சுன்னாகம் பிரதேச பொறுப்பாளர் அன்பு உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். (04-68)

# நாம் நாளாந்தம் உண்ணும் உணவில் போசாக்கு உள்ளதா எனக் கேள்வி எழுப்புங்கள்

## இதன் மூலம்தான் சுகதேகியாக வாழலாம் என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நாம் நாளாந்தம் உண்ணும் உணவுகள் போசாக்கு உள்ளதா என்ற விழிப்புணர்வுக் கேள்வி எம்முள் எழுந்தால் நிச்சயம் ஒவ்வொரு மனிதனும் சுகதேசியாக வாழலாம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சுகாதாரக் குழுவினரால் நடத்தப்பட்ட போசாக்கு விழிப்புணர்வுக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்த யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

போசாக்குள்ள உணவுகள் எம்மத்தியில் உள்ள போதிலும் அவற்றைப் பயன்படுத்த நாங்கள் தவறிவிடுகிறோம். இதனால் உலகளாவிய ரீதியில் போசாக்குத் இன்மையால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது.

முன்னைய கால மக்கள்போல நோய் நொடியின்றி வாழ்ந்ததற்கு அவர்கள் தினமும் போசாக்கு உணவுகளை உண்டனர் என்பது புலனாகிறது.

இதுவரை சுகாதாரப் பகுதியினரே இவ்வாறான கண்காட்சிகளை பல இடங்களிலும் நடத்தி வந்தனர்.

இந்தக் கண்காட்சியினைப் பார்க்கையில் மாணவர்கள் மத்தியில் போசாக்கு உணவு சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இந்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை வளர்ந்துள்ளது. எமது காலத்தில் சுகதேகி உலகத்தைப் படைப்போம் என்ற கனவு நனவாகும் காலம் அதிக தூரத்தில் இல்லை - என்றார். (203-207)

# மானிப்பாயில் உள்ள பொதுக் கிணறுமூலம் கட்டுடை மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்கலாம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

மானிப்பாய் - சமுர்த்தி வங்கி சங்கத்திற்கு அருகில் உள்ள நன்னீர் பொதுக் கிணற்றினை முழுமையாகப் பயன்படுத்தினால் கட்டுடையைச் சேர்ந்த 100 குடும்பங்கள் பயனடையும்.

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் மத்தியஸ்தர் பி.சிவயோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

மானிப்பாய் - சமுர்த்தி வங்கிச் சங்கத்துக்கு அருகில் உள்ள பொதுக் கிணறு குடிப்பதற்கு உகந்த நன்னீர். இக்கிணற்றை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பாரிய நீர்த்தாங்கி அமைத்து - பைப்லைன் மூலம் கட்டுடை பிரதான வீதியில் உள்ள 100 குடும்பங்களுக்கு நன்னீர் வழங்க முடியும்.

இத்திட்டம் தொடர்பாக விரைவில் வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ம.ஜெகூ அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை மேற்படி திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும் - வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கித் தருமாறும் வலி.தென்மேற்குப் பிரதேச செயலரைக் கோரவுள்ளதாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (203-302)

# போயாதினத்தில் மதுபானம் விற்றவருக்கு இருவாரகாலத்துக்கு விளக்கமறியல்

வலி.வடக்கு,ஜுலை22

போயா தினத்தில் மதுபான விற்பனை நிலையத்தைத் திறந்து வியாபாரம் செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட நபரை இருவார காலம் விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்றினால் கட்டளையிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் - காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றின் உரிமையாளரே போயா தினத்தன்று மதுபானம் விற்பனை செய்ததாக சுன்னாகம் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட மதுபான விற்பனை நிலைய உரிமையாளர் ஏற்கனவே ஒருதடவையும் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பெயரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் தண்டப்பணம் விதிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (04-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய புதிய தேர் வெள்ளோட்ட விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

# தேசத்தின் இறைமை, அரசமைப்புக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர் தேசத்துரோகிதான்

## சட்டத்தரணிகளுக்கு எதிரான செய்தி தொடர்பில் பிரதமர் விளக்கம்

கொழும்பு,ஜூலை23

''நாட்டின் இறைமை, அரசமைப்பு மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றுக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் - அவர்கள் எந்தத் தராதரத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - தேசத்துரோகிகளாகவே கருதப்படுவார் கள்.''

-இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் கூறினார்.

இம்மாதம் 10ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் சட்டத்தரணிகள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த செய்தியொன்று தொடர்பில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா நேற்றுமுன்தினம் சபையில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

'த சண்டே லீடர்' பத்திரிகை மற்றும் அதன் மறைந்த ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க ஆகியோருக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் 'த சண்டே லீடர்' பத்திரிகையின் சார்பாக ஆஜரான நான்கு சட்டத்தரணிகளும் 'கறுப்பு அங்கிகள் அணிந்த தேசத்துரோகிகள்' என்று இம்மாதம் 10 ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது எனக் கூறப்படுகின்றது.

இதன்மூலம் அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள நீதிமன்ற சுயாதீனம், சட்ட ஆதிக்கம் மற்றும் வழக்கொன்றில் ஆஜராவதற்கு சட்டத்தரணி ஒருவருக்கு இருக்கும் உரிமை என்பன முழுமையாக மீறப்பட்டுள்ளன.

இது சட்டத்தரணிகளுக்கு மாத்திரமின்றி முழு நீதிமன்றத்துக்குமே விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும் என்றார் ஜோஸப் மைக்கல் பெரேரா.

இதற்குப் பதிலளித்த பிரதமர் அப்போது மேலும் கூறியவை வருமாறு:-

பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளம் ஓர் இலத்திரனியல் ஊடகமாகும். அதுவும் ஊடகத்துறையின் ஓர் அங்கமே, அதற்கு ஊடகத்துறை அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கும் ஊடகச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் மக்களினதும், நாட்டினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கடமையும் அதற்கு உண்டு.

அதேபோல், இந்த நான்கு சட்டத்தரணிகள், டாக்டர்கள் போன்றோருக்கும் மற்றும் சாதாரண பிரஜைகள் அனைவருக்கும் இந்தப் பொறுப்பு உண்டு.

அரசமைப்பின்படி இந்த நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாக்கவேண்டியது இந்நாட்டு மக்கள் அனைவரினதும் பொறுப்பு. இந்நாட்டுக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அவர்கள் தேசத் துரோகிகளாகவே கருதப்படுவர்.

அவர்களை சட்டத்தரணிகள் அல்லது வைத்தியர்கள் என்று பார்க்கமுடியாது. நாட்டுக்கு எதிராக எவர் செயற்பட்டாலும் அவர் தேசத்துரோகிதான்.

அந்தவகையில் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியான சட்டத்தரணிகள் தொடர்பான செய்தியில் எந்தப் பிழையுமில்லை - என்றார். (அ-சி)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜூலை23

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படுகின்ற கட்டுடை விநாயகர் முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் அ.சரவணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கமும், கௌரவ விருந்தினராக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மானிப்பாய் பிரிவு பொறுப்பாளர் வே.மகேந்திரனும் கலந்துகொள்ளவுள்ளனர். (9)


## வாடகைக்கு

10A, கதீற்றல் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள வீட்டின் 2 அறைகள் வாடகைக்கு விடப்படும். மாணவர்கள், வேலை பார்ப்பவர்கள், பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்பு: 021 222 5687 (86961)



edexcel INTERNATIONAL

BTEC

# HND

Registrations are Open for September 2009 Intake

IIS City Campus நிறுவனத்தின் September 2009 பிரிவு பட்டக்கல்விக்கான அனுமதிகள் வழங்கலும்,மாணவர் உள்வாங்கலும் ஆரம்பமாகியுள்ளது. இப்பிரிவுகளில் கணனித்துறை,கணிய அளவியல் துறை,குடிசார் பொறியியற்துறை ,முகாமைத்துவ வர்த்தகத் துறைகளில் மாணவர்கள் தமது பட்டக்கல்விக்கான அனுமதிகளைப்பெற்றுக்கொள்ள முடியும். இப்பிரிவில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் குடிசார் பொறியியற்துறையும் ,வர்த்தக முகாமைத்துவத்துறையும் குறிப்பிடதக்கவையாகும். இக்கற்கை நெறிகளுக்கான மாணவர் அனுமதிகள் க.பொ.த உயர்தரப்பரீட்சைப்பெறுபேறுகள், தெரிவுப்பரீட்சை, நேர்முகத்தேர்வு என்பவற்றினுடாக வழங்கப்படும். கற்கை நெறிகளுக்கான மாணவர் சேர்க்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் உங்கள் அனுமதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்.

இப்பிரிவில் ஆரம்பமாகும் HIGHER NATIONAL DIPLOMA கற்கை நெறிகள்

## HND in Computing

HND in Computing (General)
HND in Computing (ICT System Support)
HND in Computing (Software Development)

இக்கற்கை நெறியினை தொடர விரும்பும் மாணவர்கள் மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவுகளில் ஏதேனும் ஒன்றைதெரிவு செய்ய முடியும் இரண்டு வருடகாலத்தினை கொண்ட இக்கற்கை நெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள் இறுதியாண்டினை கொழும்பு, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில்உள்ள முன்னணிப் பல்கலைக்கழகங்களில் B.Sc தகவல்தொழில்நுட்பத்தில் அல்லது கணனி விஞ்ஞானத்தில் இறுதியாண்டு மாணவராக இணைய முடியும். இக்கற்கை நெறி உங்கள் வெளிநாட்டு உயர்கல்விக்கான விசாக்களை இலகுவாகவும் உறுதியாகவும் ஆக்குகின்றது. நூற்றுக்கணக்கான மாணவர் களுக்கு ஓர் வெற்றிப்பாதையை ஏற்படுத்திக்கொடுத்த இக்கற்கைநெறியில் உங்களை இணைத்துக் கொள்வதனூடாக குறுகிய காலத்தில் ஓர் கணனிப்பட்டதாரியாகும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கிறீர்கள்.

## HND in Quantity Surveying

Edexcel நிறுவனத்தின் தரப்படுத்தலில் தரத்தினைப்பெற்று HND கற்கை நெறிக்கு தனித்துவம் மிக்க எமது நிறுவனத்தில் HND QS கற்கை நெறியினை கற்கின்ற இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுங்கள். இரண்டு வருட கால இக்கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் முன்னணி ஆறு நட்சத்திரப் பல்கலைக்கழகமான Salford பல்கலைக்கழகத்தில் தொடரலாம். Edexcel நிறுவனத்தின் இக்கற்கை நெறியானது ICBT Campus உடன் இணைந்து எம்மால் நடாத்தப்படுகின்றது.சர்வதேச தரம் வாய்ந்த இக்கற்கை நெறிகளினை தென்பகுதி சென்று, குறிப்பாக கொழும்பில் கற்கவேண்டிய நிலையை முற்றாக மாற்றி, பெற்றோரின் அரவணைப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே தமது சொந்த பிரதேசத்தில் குறைந்த செலவுடன் மேற்கொள்ள கூடிய வாய்ப்பினை IIS City Campus நிறுவனம் ஏற்படுத்தித்தந்துள்ளது.

## HND in Business Management

எமது மாணவர்களுக்கு வர்த்தக முகாமைத்துவத் துறையில் பட்டக் கல்வியினை வழங்கும் நோக்கில் எமது நிறுவனத்தில் முதல் முறையாக HND in Business Management கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது. இக்கற்கை நெறியானது சர்வதேச அங்கீகாரம் கொண்ட BA(Hons)/ BBA(Hons) தகைமையினை பெறுவதற்காக வாய்ப்புக்களை வழங்குகின்றது. இரண்டு வருடகால இக்கற்கை நெறியினைபூர்த்தி செய்த மாணவர்கள் இறுதியாண்டு பட்டப்படிப்பினை கொழும்பு, பிரித்தானியா , அவுஸ்ரேலியா , நியூசிலாந்து ,கனடா, அமெரிக்கா போன்ற சர்வதேச பல்கலைக்கழகத்தில் தொடரலாம்.

## HND in Civil Engineering

தொழிற் சந்தைக்கு பொருத்தமான கற்கை நெறிகளை வழங்கிவரும் எமது நிறுவனம் நாட்டின் இன்றைய தேவையை மிகவும் அவதானமாக அடையாளம் கண்டும் யாழ் மாணவர்களின் தேவைகளை அறிந்தும் முதன் முதலில் HND in Civil Engineering கற்கை நெறியை அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு வருட கால இக்கற்கை நெறியினைபூர்த்தி செய்த மாணவர்கள் பட்டப் படிப்பினை பிரித்தானியா ,அவுஸ்ரேலியா முன்னணி பல்கலைக் கழகங்களில் தொடரலாம். Edexcel நிறுவனத்தின் இக்கற்கை நெறியானது ICBT Campus உடன் இணைந்து எம்மால் நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாணவரினதும் பொறியியளாராக வேண்டும் என்ற கனவினை இக்கற்கை நெறி நிறைவேற்றித்தர வல்லது.

HND in Computing /HND in Business Management கற்கை நெறிகளினை பூர்த்தி செய்து கொள்ளும் மாணவர்கள் பிரித்தானியா Middlesex பல்கலைக்கழகத்தின் இறுதியாண்டு பட்டப்படிப்பினை எமது நிறுவனத்திலே தொடரமுடியும் .

"A" Rated centre for quality for the 5th consecutive year from Edexcel International-UK

# IIS CITY CAMPUS

#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புதிதாக திருத்தி அமைக்கப்பட்ட பஸ்கள் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதை முதலாவது படத்திலும் திருத்தி அமைக்கப்பட்ட பஸ்களை அமைச்சர்கள், வடக்கின் செயலணிக் குழுத் தலைவர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் பார்வையிடுவதையும், புதிய பஸ் ஒன்றிலன் திறப்பை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கையளிப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன் )

# பாகிஸ்தான் இராணுவம் அதிரடி நடவடிக்கை: நூறுக்கும் மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் பலி!

## ஐந்து கிராமங்களில் வீடுதோறும் தேடுதல் வேட்டை

இஸ்லாமாபாத், ஜூலை 23

பாகிஸ்தான் கீழ் டிர் மாவட்ட மைதான் பகுதியிலுள்ள ஐந்து கிராமங்களில், பாகிஸ்தான் இராணுவம் கடந்த இரு தினங்களாக மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் நூறுக்கு மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டார்கள். பெருந் தொகையானோர் காயமடைந்தனர். இராணுவத் தரப்பில் 3 சிப்பாய்கள் பலியானார்கள்.

பாகிஸ்தான் ஸ்வாத் பள்ளத்தாக்குப் பகுதியை ஆக்கிரமித்து, அட்டூழியங்களைக் கட்டவிழ்த்து வந்த தலிபான்களை ஒழித்துக்கட்டுவதற்குப் பாகிஸ்தான் இராணுவம் அதிரடி நடவடிக்கைகளை எடுத்தது. இராணுவத்துக்கு அனுசரணையாக இராணுவ ஹெலிக்கொப்டர்கள் செயற்பட்டன.

இந்த அதிரடி நடவடிக்கைக்கு அஞ்சி தலிபான்கள் இப்பகுதியிலிருந்து ஓடிவிட்டார்கள். இப்படி ஓடியவர்கள் கீழ் டிர் மாவட்டத்துக்குள் புகுந்து தலைமறைவாகியுள்ளார்கள் என்ற இரகசியத் தகவல் இராணுத்துக்குக் கிடைத்தது. இவர்கள் இந்த மாவட்ட மைதான் பகுதியிலுள்ள 5 கிராமங்களில் பதுங்கியிருக்கிறார்கள் என்ற தகவலும் வெளியாகியது.

இத்தகவல்களை அடுத்து, பாகிஸ்தான் இராணுவம் ஷேர்க்கான்னாய், ஷெடாஸ், மிஸ்ரிகானாய், சங்கோலாய், சபராய் என்னும் ஐந்து கிராமங்களில் அதிரடி வேட்டையை மேற்கொண்டது. டாங்கிகள், பீரங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவை சகிதம் இத்திடீர் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. வீடு வீடாகப் புகுந்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இவ்வேட்டையின்போது, தலிபான்களின் பதுங்கு குழிகள், மறைவிடங்கள், முகாம்கள், ஆயுதக் கிடங்குகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இச்சமயத்தில் தலிபான்கள் திரண்டு வந்து இராணுவத்தை சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்த முற்பட்டார்கள். அத்துடன் ரொக்கெட் தாக்குதல்களிலும் ஈடுபட்டார்கள். இதையடுத்து, இரு சாராருக்குமிடையே கடும் சண்டை மூண்டது.

இச்சண்டையில் நூறுக்கு மேற்பட்ட தலிபான்கள் கொல்லப்பட்டார்கள். பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. தலிபான்களின் பதுங்கு குழிகள், முகாம்கள், ஆயுதக் கிடங்குகள் ஆகியவை நிர்மூலமாக்கப்பட்டன. இச்சண்டையில் இராணுவத் தரப்பில் மூன்று சிப்பாய்கள் பலியானார்கள்.

கொல்லப்பட்டவர்களில்,ஸ்வாத் பள்ளத்தாக்கிலிருந்து ஓடிய தலிபான்களும் கீழ் டிர் மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த தலிபான்களும் அடங்குவர். மைதான் பகுதி தலிபான்கள், தலிபான் கொமாண்டர் ஹபீசுல்லா தலைமையில் செயற்பட்டு வந்தவர்களாவர்.

ஹபீசுல்லா உட்பட 5 தலிபான் தளபதிகளின் தலைக்குத் தலா 5 லட்சம் ரூபா வடமேற்கு எல்லைப்புற மாநில அரசால் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இச் சண்டையில், இந்த ஐந்து தளபதிகளும் கொல்லப்பட்டுள்ளனரா? என்ற விவரம் உடனடியாக வெளியாகவில்லை.

## தற்கொலைத் தாக்குதல்: ஆப்கானில் 13 பேர் பலி

காபூல், ஜூலை 23


ஆப்கானிஸ்தானில் ஐந்து தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். 22 பேர் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியிலுள்ள ஒரு நகரில் தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் சிவிலியன்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோன்று மற்றொரு இடத்தில் நடந்த தாக்குதலில் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படையினர் 5 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த இரு தற்கொலைத் தாக்குதல்களிலும் ஈடுபட்ட தீவிரவாதிகள் ஐந்து பேரும் உடல் சிதறிப் பலியாயினர்.

## இந்த நூற்றாண்டின் மிக நீண்ட முழு சூரிய கிரகணத்தின் அற்புதம்



டில்லி, ஜூலை 23

உலகம் முழுவதும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த நூற்றாண்டின் மிக நீளமான முழு சூரிய கிரகணம் நேற்றுக் காலை நிகழ்ந்தது. குஜராத்தின் சூரத்தில் தொடங்கிய இந்த சூரிய கிரகணம் காரணமாக வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் அதிகாலை இருளில் மூழ்கின.

சூரிய கிரகணம் வாரணாசி உள்ளிட்ட பகுதியில் முழுமையாக தெரிந்தது. எனினும், ராஜஸ்தான், கர்நாடகா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மேகமூட்டம் காரணமாக சரியாக தெரியவில்லை. சூரியன் மற்றும் பூமிக்கு இடையே நிலவு வருவதால் சூரிய கிரகணம் தோன்றுகிறது. இது பற்றி மிகவும் அரிதாகக் கருதப்படும் முழு சூரிய கிரகணமே நேற்று அதிகாலை நிகழ்ந்தது.

குஜராத்தின் சூரத்தில் தொடங்கிய இந்த கிரகணத்தின் பாதை மெல்ல வட இந்தியாவை நோக்கி நகர்ந்தது. அதிகாலை 5.28 மணிக்கு சூரிய கிரகணம் தொடங்கியது. சூரத் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் சூரிய கிரகணத்தை காண கூடியிருந்தனர்.

உத்திரபிரதேசம், பீகார், அருணாசல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சூரிய கிரகணம் தெரிந்தது. வாரணாசியில் சூரிய கிரகணம் முழுமையாக தெரிந்தது. சூரிய கிரகணம் தோன்றுவதற்கு முன்பாக சூரியன் வைர மோதிரம் போல காட்சி அளித்தது, அற்புதமான காட்சியாக அமைந்தது.

கிரகணம் காரணமாக வட இந்தியாவின் பெரும்பாலான பகுதிகள் இருளில் மூழ்கின. பல இடங்களில் மேகமூட்டம் காரணமாக கிரகணத்தை சரியாக காண முடியவில்லை. ராஜஸ்தான் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் மேகமூட்டம் கிரகணத்தை மறைத்தது. இந்தியாவை தவிர நேபாளம், மலேஷியா, திபெத்,சீனா ஆகியவை உள்ளிட்ட நாடுகளிலும் சூரிய கிரகணம் தெரிந்தது.

சீனாவின் ஷாங்காய் நகரில் சூரிய கிரகணம் முழுமையாக தெரிந்தது. இதன் காரணமாக நகரம் இருளில் மூழ்கியது. ஆயிரக்கணக்கானோர் கிரகணத்தை காண கூடியிருந்தனர். அரியானாவில் உள்ள குருஷேத்ராவில் லட்சக்கணக்கானோர் புனித நீராடினர்.

ஆவலோடு எதிர்பார்க்கப்பட்ட பீகார் மாநிலத்தில் தரேங்காவில் சூரிய கிரகணம் சரிவர தெரியாமல் ஏமாற்றியது. ஏராளமான விஞ்ஞானிகள் இங்கு கூடியிருந்தனர். தமிழகத்தில் சூரிய கிரகணம் 6.3 சதவீதம் தெரிந்தது. அதிகாலை 5.58 மணியளவில் கிரகணத்தோடு சூரியன் உதயமானது.

சென்னையில் மேகமூட்டம் காரணமாக 6.15 மணியளவிலேயே கிரகணத்தை ஓரளவு பார்க்க முடிந்தது. சென்னை மெரீனா கடற்கரையில் கிரகணத்தை முன்னிட்டு புனித நீராடினர் கன்னியாகுமரியிலும் ஆயிரக்கணக்கானோர் புனித நீராடினர். கிரகணத்தை முன்னிட்டு நேற்றுக் காலை திருப்பதி உள்ளிட்ட முக்கிய ஆலயங்களில் நடை சாத்தப்பட்டது. விசேட பூஜைக்குப் பின்னர் 9 மணியளவில் நடை திறக்கப்பட்டது.

## மியான்மர் ஆங்சான் சூகிக்கு மகாத்மா காந்தி விருது

டர்பன், ஜூலை 23

மியான்மர் ஜனநாயகப் போராட்டத் தலைவிஆங் சான் சூகிக்கு சர்வதேச அமைதி மற்றும் சமாதானத்துக்கான மகாத்மா காந்தி விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவிலான அமைதி மற்றும் சமாதானம் ஆகியவற்றில் அவரது பங்களிப்பைப் பாராட்டி அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் திங்கட்கிழமை நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் ஆங் சான் சூகி சார்பில் நாடு கடத்தப்பட்டுள்ள மியான்மர் பிரதமர் தெயின் வின் கலந்து கொண்டு விருதைப் பெற்றுக்கொண்டார். ஆங் சான் சூகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தெயின் வின் விருது வழங்கும் விழாவில் பேசுகையில், ''மகாத்மா காந்தியின் கொள்கைகளை அப்படியே கடைப்பிடிப்பவர் ஆங் சான் சூகி. அவர் மியான்மரின் விடுதலைக்காகப் போராடி வருகிறார். இந்த மியான்மர் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியாவும், தென்னாபிரிக்காவும் ஆதரவளிக்க வேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் உட்படப் பல பிரமுகர்கள் இவ்விருது வழங்கல் விழாவில் கலந்துகொண்டார்கள்.

மியான்மரில் ஜனநாயக ஆட்சி கோரி போராட்டம் நடத்திவரும் ஆங் சான் சூகி, இராணுவ அரசால் கடந்த 14 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது மகாத்மா காந்தி அறக்கட்டளை சார்பில் மகாத்மா காந்தி அமைதி விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச அமைதி மற்றும் சமாதானத்துக்கான மகாத்மா காந்தி விருது, மகாத்மா காந்தி அறக்கட்டளை நிறுவனத்தால் ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச அளவில் அமைதி மற்றும் சமாதானத்துக்குப் பாடுபடுபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

## நேபாளத்தில் பஸ்ஸுக்கு தீ வைக்க முயற்சி: மாவோயிஸ்ட் எம்.பிக்கள் மீது தாக்குதல்

காத்மாண்டு, ஜூலை 23

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவின் மேற்குப் பகுதியில் பசாங் இகாமு நெடுஞ்சாலையில் பஸ்ஸுக்கு தீவைக்க முயன்ற மாவோயிஸ்ட் எம்.பிக்கள் இருவரை பொதுமக்கள் தாக்கினர். இதில் இருவரும் காயமடைந்தனர்.

நேபாளத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தேசிய அரசியலில் இணைந்தனர். நாடாளுமன்றத் தேர்தலில் பங்கேற்று ஆட்சியையும் பிடித்தனர். மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா பிரதமரானார். ஆனால், கூட்டணியில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மாவோயிஸ்ட் அரசு சில மாதங்களுக்கு முன்னர் பதவி விலகியது.

இதையடுத்து, மாதவ் குமார் நேபாள் தலைமையில் 22 கட்சிகளைக் கொண்ட புதிய கூட்டணி அரசு அண்மையில் பதவியேற்றது. இந்நிலையில், தமாங் வகுப்பினருக்கு அதிக உரிமைகளும், உரிய பிரதிநிதித்துவமும் வழங்கவேண்டும் என வலியுறுத்தி, வேலைநிறுத்தத்தில் ஈடுபட் தம்சலிங் கூட்டு போராட்டக் குழு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த வேலைநிறுத்தத்தின்போது, பசாங் இகாமு நெடுஞ்சாலையில் பயணிகளை ஏற்றிக் கொண்டு சென்ற பஸ்ஸை மாவோஸ்ட் எம்.பிக்களான பிரேம் தமாங், சாந்து மாயா தமாங் ஆகியோரின் தலைமையிலான போராட்டக் குழுவினர் தடுத்து தீ வைக்க முயன்றனர்.

இதனால் ஆத்திரமடைந்த பஸ் பயணிகள், போராட்டக் குழுவினரை கடுமையாகத் தாக்கினர். இதில் பிரேம் தமாங் பலத்த காயமடைந்தார்.

இதனிடையில் தங்களது பிரச்சினைகளுக்குப் பேச்சுகள் உள்ளிட்ட அமைதியான வழிமுறைகளில் தீர்வு காண தம்சலிங் கூட்டுப் போராட்டக் குழுவினர் முன்வரவேண்டும் என நேபாள அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசுடனான பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் மட்டுமே தங்களது போராட்டத்தை விலக்கிக்கொள்ள [illegible] குழுத் தலைவரான பகதூர் தமாங் கூறினார்.

## பிரிட்டனின் அழகுராணியாக முதல் கறுப்பின அழகி

லண்டன், ஜூலை 23

பிரிட்டனின் முதலாவது கறுப்பு இன அழகுராணியாக ரேசல் கிறிஸ்ரி (20 வயது) திங்கட்கிழமை இரவு மகுடம் சூட்டிக்கொண்டுள்ளார். இவர் முன்னாள் ஒலிம்பிக் குறுந்தூர ஓட்ட சாம்பியன் லின்போர்ட் கிறிஸ்ரியின் மைத்துனி ஆவார்.

மேற்கு லண்டனிலுள்ள கென்ஸிங்டன் எனும் இடத்தைச் சேர்ந்த ரேசல் கிறிஸ்ரி 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிச் சுற்றொன்றில் பிரித்தானியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் [illegible]மை குறிப்பிடத்தக்கது.

''2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுவதே எனது இலட்சியமாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

மத்திய லண்டனில் மெற்றோபோல் ஹில்டன் ஹோட்டலில் மேற்படி அழகுராணிப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டி பாலியல் ரீதியான காட்சிப்படுத்தலாக உள்ளது என கண்டனம் தெரிவித்து ஹோட்டலுக்கு வெளியே ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்பட்டது.

''ஒவ்வொரு பெண்ணும் ஓர் இராணிதான்'', ''அழகு என்பது தோலில் இல்லை'' போன்ற சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் பாணியில் தாக்குதல் நடத்துவோம்

# மன்மோகன்சிங், சோனியா, சிதம்பரத்துக்கு மாவோ நக்ஸலைட்டுகள் கொலைமிரட்டல்!







கார்வா, ஜூலை 23

விடுதலைப் புலிகளின் பாணியில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் மீது தாக்குதல் நடத்துவோம் - என்று மாவோயிஸ்ட்டுகள் இயக்கம் கொலை மிரட்டல் விடுத்துள்ளது.

மத்திய உள்துறை துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு துணிச்சல் இருந்தால் ஜார்கண்ட் மாநிலத்துக்கு வரலாம் என்றும் மாவோயிஸ்ட்டுகள் பகிரங்கக் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இந்த மிரட்டல் குறித்து கவலைப்படத் தேவையில்லை என்றும், சோனியாவுக்கும், மன்மோகன் சிங்குக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது என்று அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.

மாவோ இயக்கத்தின் ஜார்கண்ட் மாநில மத்திய குழு உறுப்பினர் மற்றும் கட்ஷிலா பிராந்திய கொமாண்டர் அனுப்ஜி பெயரில் கார்வா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

ராஜீவ் காந்திக்கு விடுதலைப் புலிகளால் நேர்ந்த கதி பிரதமருக்கும், காங்கிரஸ் தலைவிக்கும் நேரலாம். உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கும் இதே கதி ஏற்படக் கூடும். ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்கள் இன்னும் ஒரு வாரத்தில் ராஜினாமாச் செய்யாவிட்டால் மரணத்தைச் சந்திக்க நேரிடும் என்று மிரட்டல் விடப்பட்டுள்ளது.

இதுகுறித்து கிழக்கு சிங்கும் மாவட்ட பொலிஸ் சூப்பிரண்ட் நவீன் குமார் சிங் கூறுகையில், இந்த மிரட்டல் கடிதம் போலியாக இருக்கலாம். லத்தேகர் மாவட்டத்தில் உள்ள பலுமத் என்ற இடத்தில் இந்த கடிதத்தை யாரோ கண்டெடுத்து கார்வா மாவட்டத்தில் வெளியிட்டுள்ளனர். எனது மாவட்டத்துக்கு உட்பட்ட கட்ஷிலாவில் மாவோ இயக்க கமிட்டி என்ற ஒன்று செயற்படுவதாக எனக்குத் தெரியவில்லை - என்றார்.

இந்த மிரட்டல் குறித்து உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கூறுகையில், பிரதமரும், காங்கிரஸ் தலைவரும் முழுமையான பாதுகாப்பில் உள்ளனர். நக்ஸல்கள் மிரட்டல் குறித்து கவலைப்படத் தேவையில்லை.

இது போன்ற மிரட்டல்கள் வருவதால் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்குமாறு மாநில அரசுகளும் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளன - என்றார்.



திருவண்ணாமலை மாவட்டம் கோட்டுப்பாக்கத்தில் பரதேசி ஆறுமுக சுவாமிகள் குருபூஜை விழாவில் குழந்தை வரம் வேண்டி, பெண்கள் கைகளை பின்னால் கட்டியபடி முட்டிப்போட்டு மண் சோறு சாப்பிட்டனர். அதன்போது எடுக்கப்பட்ட படம்.

## சூரியகிரகணத்தைப் பார்வையிடுவதில் வாரணசியில் நெரிசல்; ஒருவர் பலி!

வாராணசி, ஜூலை 23

முழுச் சூரிய கிரணகத்தைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கானோர் கூடியதால் வாராணசியில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி பெண் ஒருவர் பலியானார் மேலும் பலர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை ஏற்பட்ட முழுச் சூரிய கிரகணத்தின்போது கங்கையாற்றில் புனித நீராடுவதற்காக வாராணசியில் ஆயிரக் கணக்கானோர் திரண்டிருந்தனர்.

அப்போது திடீரென நெரிசல் ஏற்பட்டதில் பெண் ஒருவர் பலியானார். மேலும் பலர் காயமடைந்தனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# காணாமற்போன தனுஷ்கோடி மீனவரின் சடலங்கள் இலங்கைக் கரையோரத்தில்!

## மீன்வளத்துறை உதவி இயக்குநர் தகவல்

இராமேஸ்வரம், ஜூலை 23

காணாமல்போன தனுஷ்கோடி மீனவர்கள் 3 பேரில் 2 பேரின் சடலங்கள் இலங்கையிலுள்ள கொம்புத்தீவு மற்றும் எலாதீவு அருகே கரை ஒதுங்கியுள்ளன - என்று மீன்வளத்துறை உதவி இயக்குநர் இளம்வழுதி கூறினார்.

இத்தகவலை இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த விவரம் வருமாறு -

தனுஷ்கோடியில் இருந்து கடந்த 13ஆம் திகதி 4 மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்றனர். கடல் அலையில் சிக்கி அவர்களின் படகு கவிழ்ந்தது.

மறுநாள் ஒரு மீனவரின் சடலம் மணல் திட்டில் சிக்கியது. மற்ற 3 பேரின் கதி பற்றித் தெரியாமல் இருந்தது. அவர்களை கண்டுபிடிக்கக் கோரி, மீனவர்கள் இராமேஸ்வரத்தில் திங்களன்று போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், காணாமல்போன 3 பேரில் 2 பேரின் சடலங்கள் இலங்கையிலுள்ள கொம்புத்தீவு மற்றும் எலாதீவு அருகே கரை ஒதுங்கி உள்ளன. இத்தகவலை இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர் என மீன்வளத்துறை உதவி இயக்குநர் இளம்வழுதி கூறினார்.

# அ.தி.மு.கவின் தேர்தல் புறக்கணிப்புக்கு தோல்விப் பயமே காரணம் என்கிறது காங்.

சென்னை, ஜூலை 23

தோல்விப் பயம் காரணமாகவே தமிழகத்தில் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளின் இடைத்தேர்தல்களைப் புறக்கணிக்கும் முடிவை அ.தி.மு.க. எடுத்துள்ளது - என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

முதல்வர் கருணாநிதியை சென்னை கோபாலபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவே இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு -



தோற்றுவிடுவோம் என தெரிந்ததால்தான் இடைத்தேர்தலை அ.தி.மு.க. புறக்கணிக்கவுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்காக ஸ்ரீவைகுண்டம் மற்றும் தொண்டாமுத்தூர் தொகுதிகளை தி.மு.கவிடம் கேட்டுள்ளோம். இதுதொடர்பாக கருணாநிதியிடம் ஆலோசனை நடத்தினோம் - என்றார்.

கடந்த 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட்ட செல்வராஜ் வெற்றி பெற்றார். தொண்டாமுத்தூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், ம.தி.மு.கவின் கண்ணப்பனிடம் தோல்வியுற்றார்.

செல்வராஜ் மரணத்தால் ஸ்ரீவைகுண்டத்திலும், கண்ணப்பன் எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு தி.மு.கவில் இணைந்ததால் தொண்டாமுத்தூரிலும் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## திகதி குறிப்பிடப்படாமல் சட்டப்பேரவை ஒத்திவைப்பு

சென்னை, ஜூலை 23

திகதி குறிப்பிடப்படாமல் பேரவை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஒத்திவைக்கப்பட்டது. இதற்கான தீர்மானத்தை துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்தார். இது, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவையின் 11ஆவது கூட்டத் தொடர் ஜூன் 17ஆம் திகதி தொடங்கி ஜூலை 21ஆம் திகதிவரை நடைபெற்றது. 50இற்கும் மேற்பட்ட அரசுத் துறைகளுக்கான மானியங்கள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றன.

தனியார் பாடசாலைகளில் கட்டணம், ஜல்லிக்கட்டு போன்றவற்றை நடைமுறைப்படுத்தும் 30 சட்டத்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ரஜினிகாந்த் அரசியலுக்கு வந்தால் தனக்கென தனி முத்திரை பதிப்பார்

## மகள் சௌந்தர்யா தெரிவிப்பு



எனது தந்தை ரஜினியின் அரசியல் பிரவேசத்தை நானும் எதிர்பார்க்கிறேன். அவர் அரசியலுக்கு வந்தால் தனது நடவடிக்கை மூலம் தனி முத்திரை பதிப்பார், மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைப்பார்.

- இவ்வாறு ரஜினியின் மகள் சௌந்தர்யா தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வரவேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே போஸ்டர்கள் அச்சிட்டும் கூட்டங்களில் தீர்மானம் போட்டும் ரஜினிக்கு அழைப்பு விடுத்தனர்.

ஆனால் ரஜினியோ ஆண்டவன் என்ன நினைக்கிறானோ அதன்படி நடக்கும் என்று சொல்லி பிடி கொடுக்காமலேயே நழுவுகிறார்.

இரண்டு தேர்தல்களில் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணிக்கு மாறி மாறி ஆதரவு தெரிவித்தார். பின்னர் எந்தக் கட்சிக்கும் ஆதரவு இல்லை என்று ஒதுங்கிவிட்டார்.

இந்தநிலையில் ரஜினியின் மகள் சௌந்தர்யா தற்போது ரஜினி அரசியலில் ஈடுபட ஆதரவான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். அவர் கூறியவை வருமாறு -

என் தந்தை ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என்று எல்லோரும் ஆர்வப்படுகிறார்கள். அதுபோல் நானும் அவரது அரசியல் பிரவேசத்தை எதிர்பார்க்கிறேன். அவர் அரசியலில் ஈடுபட்டால் மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைப்பார். காரணம் அவருக்கு தெரிந்தது நல்லது செய்ய வேண்டும் என்பதுதான்.

அரசியலுக்கு வந்தால் தனது நடவடிக்கை மூலம் தனி முத்திரை பதிப்பார். சினிமாவுக்கு வருவதற்கு முன்பே அவரது செயற்பாடுகள் எல்லோரையும் கவர்ந்தனவாக இருந்துள்ளன. அது அரசியலுக்கு வந்தாலும் இருக்கும். அவர் வருவாரா? மாட்டாரா என்பது உறுதியாக தெரியவில்லை - என்றார்.

## விமான நிலையத்தில் சோதனை நடத்திய விவகாரம்;

# கலாமிடம் மன்னிப்புக் கேட்டது அமெ. விமான சேவை நிறுவனம்

புதுடில்லி, ஜூலை 23

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் கெடுபிடியாகச் சோதனை நடத்தியதற்காக அமெரிக்காவைச் சேர்ந்த கொன்ரினென்ரல் ஏயார் லைன்ஸ் நிறுவனம் மன்னிப்புக் கேட்டிருக்கிறது.

ஏப்ரல் 24ஆம் திகதி டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து அமெரிக்காவின் கொன்ரினென்ரல் விமான நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தில் நியூயோர்க் சென்ற முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமிடம் விமான நிறுவன அதிகாரிகள் சோதனை நடத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து சோதனை நடத்திய கொன்ரினென்ரல் ஏயார் லைன்ஸ் நிறுவனத்துக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என பல்வேறு தரப்பிலிருந்தும் குரல் எழுப்பப்பட்டது.

இந்நிலையில், கலாமிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக கொன்ரினென்ரல் ஏயார் லைன்ஸ் நிறுவனம் நேற்று தெரிவித்துள்ளது. கலாமின் உணர்வுகளைப் புண்படுத்த வேண்டுமென்பது தங்களது நோக்கமாக இருந்ததில்லை எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சூகியை விடுவிக்காவிட்டால் மியான்மரை நீக்கவேண்டும்

## ஏசியான் அமைப்புக்கு ஹிலாரி கோரிக்கை

பாங்கொக், ஜூலை 23

"மியான்மரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள ஜனநாயக ஆதரவுக் கட்சித் தலைவி ஆங் சான் சூகியை, மியான்மர் இராணுவ ஆட்சியாளர் விடுதலை செய்யவேண்டும். இல்லையேல், 'ஏசியான்' அமைப்பிலிருந்து மியான்மரை நீக்கிவிடவேண்டும். இது விடயத்தில் இதர 'ஏசியான்' நாடுகள் பின்வாங்கக்கூடாது."

- இவ்வாறு தாய்லாந்து விஜயத்தை மேற்கொண்டு அதன் தலைநகரான பாங்கொக்கை வந்தடைந்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் தொலைக்காட்சிச் சேவைக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

தாய்லாந்திலுள்ள புகெட் தீவில் நடைபெறும் 16 ஆவது ஏசியான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஹிலாரி கிளின்ரன் இவ்விஜயத்தை மேற்கொண்டுள்ளார். பாங்கொக்கில் இவர் தாம் அளித்துள்ள பேட்டியில், "ஆங் சான் சூகியை விடுவிக்க ஆட்சியாளர் மறுத்தால், மியான்மரை ஆசியான் அமைப்பிலிருந்து நீக்குவது தொடர்பாக, இதர உறுப்புநாடுகள் உடனடி பரிசீலனையை மேற்கொள்ளவேண்டும்" என்றும் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

"ஆங்சான் சூகியை வீட்டுக்காவலிலிருந்து விடுவிப்பதற்கான கால எல்லை அண்மியதும் அவர் மீது ஆட்சியாளர் புதிய குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர். இவருக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர். இவை தடுப்புக்காவலை நீடிப்பதற்கான தந்[illegible]" என்றும் இவர் அதில் சுட்டி[illegible].

# அமெரிக்காவுடனான ஒப்பந்தத்துக்கு எதிர்ப்பு நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

டில்லி, ஜூலை 23

அமெரிக்காவுடன் இராணுவக் கருவிகள் இறக்குமதி தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இராணுவ தொழில்நுட்பம் மற்றும் கருவிகள் இறக்குமதி தொடர்பாக அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஆதரித்து, நாடாளுமன்றில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அறிக்கையை தாக்கல் செய்து பேசினார்.

இந்த ஒப்பந்தப்படி, இறக்குமதி செய்யப்படும் பொருள்களை ஆய்வு செய்யும் உரிமை அமெரிக்காவிற்கு அளிக்கப்பட்டிருப்பதற்கு பா.ஜ.க. மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

[illegible] அமெரிக்காவிடம் இந்தியா [illegible]விட்டது என அவர்கள் குற்றம் சாட்டினர்.


கேள்வி நேரம் முடிந்ததும், பா.ஜ.க. உறுப்பினர் யஷ்வந்த் சின்கா எழுப்பிய இந்தக் குற்றச்சாட்டை மற்ற எதிர்க்கட்சியினரும் ஆதரித்ததைத் தொடர்ந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு எஸ்.எம்.கிருஷ்ணா தள்ளப்பட்டார்.

அமெரிக்காவிடம் இந்திய இறையாண்மை அடகு வைக்கப்பட்டுவிட்டது என்ற எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டை அவர் மறுத்தார். இது போன்ற பல ஒப்பந்தங்கள் மற்ற நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது என அவர் விளக்கமளித்தார்.

ஆனால் அமைச்சரின் விளக்கம் திருப்தி அளிக்கவில்லை என்று கூறி எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி தலைமையில் பா.ஜ.கவின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். பா.ஜ.க. தவிர சமாஜ்வாடி, பகுஜன்சமாஜ், ஐக்கிய ஜனதாத் தளம், கம்யூனிஸ்ட் கட்சிகள், சிவசேனா, அ.தி.மு.க., ராஷ்டிரீய ஜனதா தளம் ஆகிய கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்பு செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற வடக்கின் வசந்தம் மாநாட்டில் வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ மங்கல விளக் கேற்றுவதை முதலாவது படத்திலும் அவருடன் யாழ். அரச அதிபர் கே.கணேஷ், பயணிகள் போக்குவரத்து அமைச்சர் லசந்த அழகிய வன்ன, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, மேஜர் ஜெனரல் மெண்டகு சமரசிங்க ஆகியோர் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும் மாநாட்டில் கலந்துகொண்ட அதிகாரிகளை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# பழுதடைந்திருந்த 50 பஸ்கள் திருத்தப்பட்டு நேற்று முதல் சேவைகளை ஆரம்பித்தன

## யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் திருத்தியமைக்கப்பட்ட 50 பஸ்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் சேவையை ஆரம்பித்தன.

வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்கான செயலணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ஆகியோர் இணைந்து இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்தனர்.

இது தொடர்பான வைபவம் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் பழுதடைந்த நிலையில் இருந்த 50 பஸ்கள் திருத்தியமைக்கப்பட்டு யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு கொண்டுவரப்பட்டன. அவற்றுடன் 5 புதிய பஸ்களும் அங்கு கொண்டு வரப்பட்டன.

நேற்று முற்பகல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருகை தந்த வடக்கு மீள்குடியமர்வு மற்றும் அபிவிருத்திக்குமான செயலணித் தலைவர் பஸில்ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்துப் பிரதி அமைச்சர் சில்வா ஆகியோர் இந்தச் சேவையை ஆரம்பித்து வைத்தனர். அத்துடன் 5 புதிய பஸ்களும் போக்குவரத்துச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டன.

பற்றறிகள், ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இல்லாத நிலையில் பழுதடைந்திருந்த இந்த பஸ்களை 48 மணி நேரத்துக்குள் திருத்தியமைக்குமாறு உத்தரவிட்டிருந்த போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும இதற்கென ஒரு கோடி 20 லட்சம் ரூபா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்து இந்த பஸ்கள் அவசர அவசரமாகத் திருத்தப்பட்டு நேற்று முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இதன் மூலம் யாழ்.குடாநாட்டில் போக்குவரத்துச் சபையின் பயணிகள் பஸ்சேவைகள் மேலும் விஸ்தரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (50)

( படங்கள் 13 ஆம் பக்கத்தில்)

# பொலிஸ் நிலையங்கள் இப்போது அமைந்துள்ள தனியார் கட்டடங்களை விடுவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள தனியார் கட்டடங்களை விடுவிப்பதற்கு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பஸில் ராஜபக்ஷ எம்.பி. பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று யாழ். பொது நூலகத்தில் நடைபெற்ற 'வடக்கின் வசந்தம்' விசேட மாநாட்டில் வைத்தே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

தனியார் கட்டடங்களில் பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ளமையால் அந்தக் கட்டடங்களின் உரிமையாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக இந்த மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள தனியார் கட்டடங்கள், பொதுமக்களின் வீடுகள் ஆகியவற்றை விடுவித்து அவற்றை உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு பஸில் எம்.பி. அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தனியார் கட்டடங்களில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களை அரச காணிகளில் நிரந்தர கட்டடங்களை அமைத்து செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், முன்னர் பொலிஸ் நிலையங்கள் அமைந்திருந்த இடங்களில் மீண்டும் அவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பஸில் எம்.பி. உத்தரவிட்டார்.

பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தர கட்டடங்களை அமைப்பதற்கான அரச காணிகளை இனங்காண்பதற்கு யாழ். அரச அதிபர் குறித்த பிரதேசங்களின் பிரதேச செயலர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இந்த மாநாட்டில் பணிப்புரை விடுக்கப்பட்டது.

பொலிஸ் நிலையங்களை அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடும் விரைவில் பெற்றுத்தரப்படும் என அங்கு பஸில் எம்.பி. கூறினார். (50)

# ஏ.பி. செய்தியாளரின் விசாவை நீடிக்க அரசு மறுப்பு; திங்களன்று அவர் வெளியேறினார்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் மனிதப் பேரவலம் இடம்பெறுவதாக சர்வதேச சமூகத்துக்கு சுட்டிக்காட்டிய அசோஸியேட்டட் பிரஸ் (ஏ.பி) செய்திச் சேவையைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் இலங்கை அரசினால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்.

இலங்கை அரசு அவருடைய விசாவைப் புதுப்பிப்பதற்கு மறுத்த நிலையிலேயே ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் கடந்த திங்கட்கிழமை இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என 'அசோஸியேட்டட் பிரஸ்' செய்திச்சேவை கவலை தெரிவித்துள்ளது.

இலங்கையில் அரச பயங்கரவாதம் தலைவிரித்தாடுவதாகவும், பாரிய மனிதப் பேரவலங்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் ஏராளமான செய்திகளை அறிக்கையிட்டிருந்தார். இதனால் அவர் இலங்கை அரசின் கோபத்தையும், அதிருப்தியையும் சம்பாதிக்க நேர்ந்ததாகத் தெரியவருகின்றது. குறிப்பாக இலங்கையில் வகைதொகை இன்றி இடம்பெற்றுவரும் மனிதப் பேரவலம் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் இரகசிய அறிக்கை ஒன்றை ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் சர்வதேசத்துக்குப் பகிரங்கப்படுத்தியதன் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கை தலைகுனியவேண்டி ஏற்பட்டது.

ஊடகவியலாளர் ரவி நெஸ்மன், புலிகளுடனான இறுதி யுத்தத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரழிவுகளை சர்வதேச சமூகத்துக்கு சுட்டிக்காட்டியமை மட்டுமன்றி யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களைத் தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு முகாம்களில் முடக்கி வைக்க அரசு தீட்டிய இரகசியத் திட்டமொன்றை அம்பலப்படுத்தியதன் மூலம் அரசுக்குப்பெரிய தலையிடியாக மாறியிருந்தார் எனவும் தெரியவருகிறது.

ஊடகவியலாளர் ரவி நெஸ்மன் 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கு அசோஸியேட்டட் பிரஸ் சார்பாகக் கடமையாற்ற வருகை தந்திருந்தார். சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் அவருடைய விசா புதுப்பிக்கப்பட வேண்டும். அதற்கமைய 2008 ஆம் ஆண்டு அவருடைய விசா புதுப்பிக்கப்பட்டது. ஆனால் அவருடைய விசாவைத் தற்போது மீண்டும் புதுப்பிக்க முடியாதென இலங்கை அரசு திட்டவட்டமாக மறுத்துவிட்டது. 'அசோஸியேட்டட் பிரஸ்' செய்தி நிறுவனம் அவருடைய விசாவைப் புதுப்பிப்பதற்கு மேற்கொண்ட பகீரதப் பிரயத்தனங்கள் எவையும் வெற்றிபெறவில்லை.

இலங்கை அரசின் கோபத்தையும், அதிருப்தியையும் சம்பாதித்த, இலங்கை ஊடகவியலாளர்கள் 11 பேர் கடந்த வருடம் நாட்டை விட்டு வெளியேறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்கள் எனவும், 2006 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஊடகவியலாளர்கள் 14 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் அசோஸியேட்டட் பிரஸ் செய்திச்சேவை, ரவி நெஸ்மன் இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டது தொடர்பான செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

### திட்டமிட்டு வெளியேற்றவில்லை

இதேநேரம், ஊடகவியலாளர் ரவி நெஸ்மனை இலங்கை அரசு திட்டமிட்டு வெளியேற்றவில்லை என்று ஜனாதிபதி செயலகத்தின் சர்வதேச ஊடகங்களுக்குப் பணிப்பாளராகக் கடமையாற்றும் எல்.ராஜகருணநாயக்க வலியுறுத்திக் கூறுகின்றார். பொதுவாக வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கையில் இரு வருடங்களுக்கே தங்கியிருந்து கடமையாற்ற வேண்டும் என்பது பொது நியதி என்று அவர் இதனை நியாயப்படுத்தியுள்ளார்.

ஆனால் ரவி நெஸ்மனுக்கு முன்பாக அசோஸியேட்டட் பிரஸ் நிறுவனம் சார்பாக 1997 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த ஊடகவியலாளர் டிலிப் கங்குலி இங்கு 2007 வரை தங்கியிருந்து கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த காலங்களில் ஊடகவியலாளர் ரவி நெஸ்மனின் அறிக்கைகள் மற்றும் செய்திகளுக்கு இலங்கை அரசு அடிக்கடி மறுப்புச் செய்திகளை வெளியிட்டு வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-சி)

# மட்டக்களப்பில் ஆயுத கையளிப்புக்கு கால எல்லை நீடிப்பு

கொழும்பு, ஜூலை 23

மட்டக்களப்பு, ஏறாவூரிலும், வாளைச்சேனையிலும் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போர் அயுதங்களை கையளிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது என மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எடிசன் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் எதிர்வரும் 30ஆம் திகதிவரை ஆயுதங்களை கையளிக்கலாம் என அவர் கூறியிருந்தார்.

ஏற்கனவே காத்தான்குடியில் ஆயுதங்கள் கையளிப்பிற்கான கால எல்லை வழங்கப்பட்டு ஆயுதங்களும் கையளிக்கப்பட்டன என்பது அறிந்ததே. (சி)

# தீவகக் கடற்பரப்பில் நேற்று ஐந்தாவது சடலம் கரை ஒதுங்கியது

யாழ்ப்பாணம், ஜூலை 23

நெடுந்தீவு கடற்கரைப் பகுதியில் கரையொதிங்கியதாகக் கூறப்படும் சடலமொன்றை நெடுந்தீவுப் பொலிஸார் நேற்றுமாலை 5 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சடலத்தின் முகம் அழுகி சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. சடலம் அடையாளம் காணப்படவில்லை.

தீவகப் பரப்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தொடக்கம் நேற்று மாலை வரை 5 சடலங்கள் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-07-78)

# காலி மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூலை 23

காலி மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் துஷந்த செனவிரத்ன இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 7.10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் பொலிகஹா சந்தியில் வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

அதன்போது காயமடைந்த அவர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அங்கு சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்தார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது. (சி)

# இந்தியாவின் செல்வாக்கினால்தான் இலங்கைக்கு கடன் கிடைக்கிறது

கொழும்பு, ஜூலை 23

இந்தியாவின் செல்வாக்கு காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி இலங்கைக்கு கிடைக்கும் சந்தர்ப்பம் உருவாகியுள்ளது என்று வெளிநாட்டு இராஜதந்திரியொருவர் ஐ.பி.எஸ். செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு சர்வதேச ரீதியில் மிகுந்த செல்வாக்குள்ளது என்றும் -

அது சிறுபான்மைத் தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு நியாயபூர்வமான தீர்வை முன்வைக்குமாறு இலங்கையைக் கேட்டுள்ளது என்றும் அந்த இராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார்.

மேற்குலகின் தலைமையில் செயற்படும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் கொள்கைகள் குறித்த கடுமையான விமர்சனத்துக்குப் பின்னர் இந்த நிதி அமைப்புகள் இந்தியாவையும் சீனாவையும் கௌரவமாக நடத்துகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''மேலும் கடந்த வாரம் எகிப்தில் இந்திய - இலங்கைத் தலைவர்கள் சந்தித்துக் கொண்டவேளை தமிழ் மக்களுக்கு சில உரிமைகளை வழங்குவது குறித்து இரு நாடுகளுக்கும் மத்தியில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது போலத் தோன்றுகின்றது. இதற்குப் பதில் சர்வதேச நாணய நிதிய விடயத்தில் இந்தியா இலங்கைக்கு உதவியுள்ளது'' என்றும் அந்த இராஜதந்திரி தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்

## பருத்தித்துறை ஐக்கிய வி.கவின் உதைபந்தாட்டப் போட்டிகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், கழக ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு டயமன்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆதிசந்தி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு திக்கம் வி.கவை எதிர்த்து சென்.தோமஸ் வி.கவும், 4.30 மணிக்கு டயமன்ஸ் வி.கவை எதிர்த்து கலட்டி வி.கவும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு யங்கம்பன்ஸ் வி.கவை எதிர்த்து கொலின்ஸ் வி.கவும் மோதவுள்ளன. (அ-7)

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் வைத்து எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்படும் அறிவிப்பை பஸில் ராஜக்ஷ எம்.பி. வெளியிட்டார்.

இதுவரை 140 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் பெற்றோல் இன்று வியாழக்கிழமை தொடக்கம் 134 ரூபாவாகவும், 81 ரூபா 60 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் டீசல் 76 ரூபா 50 சதமாகவும், 59 ரூபா 60 சதமாக விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் மண்ணெண்ணை 54 ரூபாவாகவும் விலைகள் குறைக்கப்பட்டு விற்பனை செய்யப் படவுள்ளன. (அ-50-224)

## ஏ-9 வீதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் படைத் தளபதிகள் வரவேற்றனர்.

துரையப்பா விளையாட்டரங்கில் இருந்து பஸில் ராஜபக்ஷ குழுவினர் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு முன்பாக அழைத்து வரப்பட்டனர். அங்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை வரவேற்றார். இந்தக் குழுவில் பயணிகள் போக்குவரத்து அமைச்சர் லஸந்த அழகியவன்ன, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, ஜனாதிபதி விசேட செயலணியின் பணிப்பாளர் நாயகம் லலித் அபயகுணவர்த்தன ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

ஏ- 9 வீதியூடான போக்குவரத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 5 பஸ்கள் பயணிகளை ஏற்றியவாறு அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. நேற்றுக் கப்பலில் பயணம் செய்வதற்காக யாழ். சிங்கள மகாவித்தியாலயத்துக்கு வந்திருந்த பயணிகள் இந்த பஸ்களில் ஏற்றப்பட்டிருந்தனர்.

முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷ, சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தேசியக் கொடியை அசைத்துப் போக்குவரத்தை ஆரம்பித்து வைத்தனர். இதன் பின்னர் பஸ்களில் இருந்த பயணிகள் பதிலுக்குத் தமது கைகளை அசைத்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

நேற்றைய போக்குவரத்துச் சேவையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 5 புதிய பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டன. இவற்றில் மொத்தம் 210 பயணிகள் பயணத்தை மேற்கொண்டனர்.

இங்கிருந்து முற்பகல் 10.50 மணிக்குப் புறப்பட்ட பஸ்கள் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் வவுனியாவை சென்றடைந்தன என்றும் அங்கு வரவேற்பு வைபவம் ஒன்று இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பமான இந்தப் பயணிகள் போக்குவரத்து இராணுவத்தின் பாதுகாப்பு வழித்துணையுடன் நடைபெற்றது.

2006ஆம்ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் ஏ-9 வீதி மூடப்பட்டதுடன் அதன் ஊடான பொதுமக்கள் வாகனப் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

பிரத்தியேக வகுப்பு
மெய்யியல்
யாழ்ப்பாணம் - பேராதனை
ஆசிரியர்
N.உதயகுமார்
B.A.(Hons), Phil.Spl.
தொடர்புகளுக்கு:
46/11, ஆசீர்வாதப்பர்வீதி,
நல்லூர்.
தொ.பே.: 021 222 7297

Diploma in
Computerized Accounting
#Manual Accounting
#MYOB #Tally
#Quick Book Pro
#Accpack
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பதிவுகளை 26.07.2009 முன் நேரில் மேற்கொள்ளவும்
324,
Palaly Road,
Jaffna.
Supported by UNDP/JRRP

## யாழ்.மாவட்டத்தை கட்டியெழுப்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மென்டக்க சமரசிங்க, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

'வடக்கின் வசந்தம்' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக பஸில் ராஜபக்ஷ எம்.பி சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்களிடம் கேள்வி எழுப்பினார். இந்த திட்டங்களின் நிலைமை குறித்து திணைக்களத் தலைவர்கள் அவருக்கு விளக்கமளித்தனர்.

அதன் போது சில திட்டங்கள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமல் உள்ளமை, அவை தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, செயற்படுத்துவதில் வேகம் காட்டாமை குறித்து பஸில் ராஜபக்ஷ எம்.பி விளக்கம் கோரினார். அவற்றை உடனடியாகச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்தார்.

இந்த மாநாட்டில் செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தைக் கட்டியெழுப்புவதற்குப் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவதில் காலதாமதம் காட்டப்படக் கூடாது. இது விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் அக்கறையுடன் செயற்படவேண்டும்.

ஒரு வேலையை எந்த வழியால் சுலபமாக செய்து முடிக்கலாம் என யோசிக்க வேண்டும். சுலபமான வழியை விட்டு சிரமமான வழியில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றை விட்டு திட்டங்களை உடனடியாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள்.

அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் அரச அதிபருடன் கலந்து ஆலோசித்து அவரின் அறிவுறுத்தலுக்கு அமையவே செயற்படுத்த வேண்டும்.

**நிதி ஒதுக்கீடுகள்பெறுவதற்கு**

திட்டங்களுக்கான முன்மொழிவுகளை உரிய முறையில் உரிய இடங்களுக்கு சமர்ப்பித்தால் மட்டுமே அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெற முடியும். இதனை அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கல்வி, சுகாதார, மருத்துவ வசதிகளை முன்னேற்றுவதற்கும் போதியளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கங்கேசன் - பளை ரயில்பாதை துரித கதியில் புனரமைக்கப்படும்**

யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமாக தற்போது காங்கேசன்துறை முதல் பளை வரையான ரயில்பாதை துரித கதியில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன.

இவற்றைவிட விவசாயத்தை மேம்படுத்துவதற்கும், வீதி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இங்குள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவை விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும். நீர் வழங்கல், மின் விநியோகம் போன்றவையும் விரைவாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அனைத்துத் திட்டங்களுக்கும் 'வடக்கின் வசந்தம்' மூலம் போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-50-224)

## கண்ணிவெடிகளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதிமுகாம்களில் வாழ்கின்ற மக்களை கூடிய விரைவில் மீள்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கண்ணிவெடிகள் அகற்றப்படுகின்றன என்று கூறி அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு மீள்குடியமர்த்தலைத் தாமதப்படுத்த வேண்டாம். அம்மக்கள் இடம்பெயர்ந்த இடங்களில் கண்ணிவெடிகள் இல்லாத இடங்களும் உள்ளன.

நடந்து முடிந்த யுத்தத்தால் வன்னி மக்களின் வீடுகள், கடைகள், தொழில்கள் போன்றவை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்து அம்மக்களை மீள்குடியமர்த்த வேண்டும்.

**அரச சார்பற்ற நிறுவனங்கள் பணியாற்ற அனுமதிக்க வேண்டும்**

அந்தப் பகுதிகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் சென்று பணியாற்ற அனுமதிக்க வேண்டும். அவை மக்களுக்கு அதிக சேவைகளைச் செய்துள்ளன.

இந்த மக்களின் அவல நிலைக்கு அரசுதான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். யாரிடமும் கையேந்தாத எமது மக்கள் இப்போது மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தற்போது வன்னி இராணுவமயமாக்கப்படுகின்றது. இது மக்களின் சாதாரண வாழ்க்கையைப் பாதிக்கும். மக்களை விடுவித்தோம் என்று கூறும் அரசு இந்த மக்களை இராணுவமயத்தின் கீழ் வைத்துக்கொள்ளத் திட்டமிடுவது ஏன்?

**இராணுவமயமாக்கல்நிறுத்தப்பட வேண்டும்**

பல ஏக்கர் நிலம் வன்னியில் இராணுவமயமாக்கலுக்கு ஒதுக்கப்படுகின்றது. இது உடன் நிறுத்தப்படல் வேண்டும். சோதனைச் சாவடிகள் நீக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படல் வேண்டும்.

தமிழர்களின் விடுதலை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றால் அவர்களின் அரசியல் பங்குபற்றுதல் அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களின் தனித்துவம், சுயமரியாதை, உரிமை உள்ளிட்ட அனைத்தும் மதிக்கப்படல் வேண்டும்.

சர்வதேச நாணயநிதியம் இந்த மக்களை மீள் குடியமர்த்துவதற்காகவே நிதியுதவி வழங்குகின்றது. பொருளாதார அபிவிருத்திக்கு முன்னதாக இம்மக்கள் மீள்குடியமர்த்தப்படல் வேண்டும். - என்றார். (அ-சி)

## இலங்கையுடனான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் கலந்துகொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா செய்தியாளர்களுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களை உடனடியாக மீளக் குடியமர்த்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கு வலியுறுத்தியுள்ளோம் என கிருஷ்ணா குறிப்பிட்டுள்ளார்.

இதுவே இலங்கையுடனான தமது பேச்சுகளில் முக்கியத்துவம் பெறும் என்று குறிப்பிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர், 180 நாள்களுக்குள் அநேகமான மக்களை மீளக் குடியமர்த்த முடியுமென இந்தியாவிடம் கொழும்பு உறுதியளித்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (அ-சி)

## யாழ்.-கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணிகள் ஏற்றப்பட்டனர்.

இதுதொடர்பாக போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை முகாமையாளர் எஸ்.யோகநாதன் தெரிவித்தவை வருமாறு:-

ஒவ்வொரு பயணியிடம் இருந்தும் யாழ். - கொழும்பு பயணக் கட்டணமாக 325 ரூபா அறவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட இந்த 5 பஸ்களும் மதவாச்சி பஸ் நிலையம் வரை செல்லும். இதேவேளை, கொழும்பு மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட போக்குவரத்துச் சபையின் 5 பஸ்களும் பயணிகளுடன் மதவாச்சி பஸ் நிலையத்தை வந்தடையும். அங்கு வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பயணிகள் கொழும்பில் இருந்து வந்த பஸ்களுக்கும் கொழும்பில் இருந்து வந்த பயணிகள் யாழ்ப் பாணத்திலிருந்து சென்ற பஸ்களுக்கும் மாற்றப்படுவர். யாழ்ப்பாணத்தில் பெறப்பட்ட பயணச் சீட்டுடனேயே அவர்கள் கொழும்பு வரை பயணம் செய்வார்கள். - என்றார். (அ-50)

## மீண்டும் பிரிவினை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி ஒரு புதிய குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறது ஜே.வி.பி.

வவுனியா அகதிகளின் நிலைமை தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபை ஒத்திவைப்புப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதி முகாம்களில் 3 லட்சம் மக்கள் அடிப்படை வசதிகள் எவையுமின்றி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குறைவாகவே கவனிக்கப்படுகின்றனர்.

இந்த மக்களின் நலனைக் கவனிக்க, அவர்களைத் துரிதமாக மீள்குடியமர்த்த அனைத்துக் கட்சிகளையும், அமைப்புகளையும் ஒன்றிணைத்த முறைமை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும்.

எமது நாடு மூன்று இனங்களையும், அந்த இனங்களின் கலாசாரத்தையும் கொண்ட அழகிய நாடு. இது மூவினத்திற்கும் சொந்தமானது. அப்படியொரு நாட்டில் வேறொரு இனம் அகதி முகாம்களில் வாழ்கின்றது.

**அப்பாவி மக்களை நாம் காப்பாற்ற வேண்டும்**

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் அது அகதிகளை உருவாக்கிக் கவலையுடன்தான் முடிந்துள்ளது. இந்த யுத்தத்திற்கு அவர்களா பொறுப்பு? அவர்கள் இந்த யுத்தத்தின் குற்றவாளிகளா? இல்லை. அவர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவிகள். அவர்களை நாம் காப்பாற்ற வேண்டும்.

மூவினங்களையும் ஒன்றிணைத்த தேசிய ஒற்றுமையை உருவாக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுதான். இந்த அகதிகளை மீள் குடியமர்த்தி இதைச் செய்யவேண்டும்.

இந்த அகதிகளை இலக்காகக் கொண்டு இந்தியா, மேற்கத்தைய நாடுகள், அரச சார்பற்ற அமைப்புகள், போன்றவை மீண்டும் ஒரு பிரிவினைவாதத்தை உருவாக்கக்கூடிய அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தை முன்கொண்டு செல்கின்றன.

இந்திய வைத்தியர்கள்தான் அகதி முகாம்களில் மருந்து வழங்குகின்றனர். அதேபோல் இந்திய வீரர்கள் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இந்தியா இந்த அகதிகளை வைத்துத் தனக்குச் சாதகமானமுறையில் காய் நகர்த்துகின்றது.

**அகதி மக்களின் வயிற்றில் அடித்து அரசியல் சூதாட்டம் நடத்தாதீர்**

இந்த மக்களை வைத்து இந்த அரசும் அரசியல் நடத்துகின்றது. தயவு செய்து இந்த மக்களின் வயிற்றில் அடித்து அரசியல் சூதாட்டம் ஆடவேண்டாம் என்று நாம் இந்த அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நாட்டின் அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்ட அந்த மக்களின் அடிப்படை உரிமையை அரசு நிறைவேற்ற வேண்டும். அந்த மக்களைச் சென்று பார்ப்பதற்கு எம்.பிக்களுக்கு இருக்கும் உரிமையை அரசு மதிக்கவேண்டும்.

இந்த மக்கள் உடன் மீள்குடியேற்றப்பட வேண்டும். தேசிய ஒற்றுமையை உருவாக்க இந்த நாடாளுமன்றம் தலையிட வேண்டும். அகதிகளுக்குத் தேவையான அனைத்தையும் அரசு நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். - என்றார். (அ-சி)

IDM Computer Studies (Pvt) Ltd
Affiliated University College
Jaffna.
Nation's ICT Academy
Pre University College
Affiliated University College
ISO 9001:2000
புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.07.2009
Auto Cad - 09.00 a.m
DICAP - Accounting Package - 03.00 p.m
216, Navalar Road, Jaffna. Tel: 021 222 9901
www.idm.edu www.idm.lk

புத்தகங்கள் விற்பனைக்கு
இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட 1000 இற்கும் மேற்பட்ட வகையான புத்தகங்கள் மற்றும் தரம் -5 புலமைப்பரிசில் விசேட வழிகாட்டி நூல்கள், மருத்துவப் புத்தகங்கள் மற்றும் ஏனைய அனைத்துப் புத்தகங்களையும் விசேட கழிவு விலையில் நீங்களே தெரிவு செய்து எமது காட்சியறையில் பெற்றுக் கொள்ளலாம்.
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

அடுத்த பிரிவு ஆரம்பம்
AAT,HNDA,Bcom.BBA பூர்த்தி செய்து பாடவிலக்கு பெற விண்ணப்பித்தவர்களும், புதிதாக விண்ணப்பிப்போரும் 26.07.2009 க்கு முன் உடன் தொடர்பு கொள்ளவும்.
CIMA
விபரங்களுக்கு நேரில்
MCS 324, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்
Supported By UNDP/JRRP
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

ABS COURIER SERVICE (D.H.L)
திறப்புவிழா அழைப்பிதழ்
யாழ் மண்ணில் முதன் முறையாக ABS COURIER SERVICE நிறுவனத்தினராகிய நாம் எமது சர்வதேச கூரியர் சேவையை ஆரம்பிப்பதை இட்டு பெருமகிழ்வடைகிறோம்.
உங்களது பொருட்கள், ஆவணங்கள், கடிதங்கள் ஆகியவற்றை
➤ ஒரே நாளில் இலங்கைத்தீவுக்குள் உள்ள சகல கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் அனுப்பிவிட முடியும்.
➤ உலகெங்கிலுமுள்ள 220 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு மிக விரைவாக அனுப்பிவிட முடியும்.
காலம் : 23.07.2009 முற்பகல் : 11.00 மணி
இடம் : 357, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
Tel.:071 8739574, 071 8739573
எமது திறப்பு விழாவில் கலந்து கொண்டு எமது சேவைகளால் பயன் பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
Head Office:141, Kirula Road, Colombo 05. T.P No: 0114 414444

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.07.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான தயார்படுத்தல் பரீட்சைத் தொடர்-2009

**வினாத்தாள் - II** **நேரம்: 1மணி 15 நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. பாடல் அடிகளைக்கொண்டு 1-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

எண்ணிய முடிதல் வேண்டும்,
நல்லவே எண்ணல் வேண்டும்,
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்

01) இப்பாடலில் எதற்காக வேண்டுதல் இடம்பெறுகிறது?
.....................................................

பின்வருவனவற்றின் ஒத்த சொற்களை எழுதுக.
02) திண்ணிய - ........................ 03) பரிதி - ........................

பின்வருவனவற்றின் எதிர்ச்சொற்களை எழுதுக.
04) முடிதல் - ........................ 05) தெளிந்த - ........................

06) "நல்லறிவு" என்பதைப் பிரித்தெழுதுக. ........................
07) "நின் முன்" என்பதன் கருத்து யாது? ........................
08) "பனியே" என்பதை பன்மையில் எழுதுக? ........................
09) பாடலில் உள்ள உவமைத் தொடரை எழுதுக?........................
10) பாடலில் உள்ள பெண்பால் பெயர்ச் சொல்லை எழுதுக?
........................

02. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.
1) நல்ல / அவரை / கொண்டு / ஒருவரின் / மட்டிடலாம் / ஒரு / பண்பைக்
........................................................................
2) தாய் / கிடந்தாள் / கம்பலையுமாகக் / பிரிந்த / கண்ணீரும் / குழந்தையைப்
........................................................................

03. பின்வரும் பழமொழிகளின் கருத்துகளை எழுதுக.
1) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
........................................................................
2) ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
........................................................................

04. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்துப்பிழையற்ற சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
1) புதியவை ........................யாக மாறுவது நியதியாகும். (பழையவை/பளையவை/பலையவை)
2) சூரியனின் பொற்கதிர்கள் ........................ விழுந்தன. (நிளத்தில்/நிழத்தில்/நிலத்தில்)
3) கோழிக் குஞ்சுகள் வானத்தை ........................ பார்த்தன. (அன்னாந்து/அண்ணாந்து/அன்ணாந்து)

05. பின்வரும் உருக்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.





1) ........................ 2) ........................ 3) ........................

06. பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.
1) Could you please help me? : ........................
2) Form a line : ........................
3) Where do you live? : ........................

07. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.



ஒபகே நம மொக்கத?
........................

மகே நம பிரியந்த.
........................



08 - 29 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

08. பின்வருவனவற்றுள் எண்ணெய் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படாத வித்து எது?
1) எள். 2) சணல். 3) இலுப்பை. 4) வேம்பு.

09. பின்வரும் வித்துக்களில் எந்த வித்தில் சிவப்பு, கறுப்பு ஆகிய நிறங்கள் சேர்ந்து காணப்படும்?
1) இப்பிலிப்பில். 2) மஞ்சாடி. 3) குன்றுமணி. 4) இலந்தை.

10. பின்வருவனவற்றுள் முள்ளந்தண்டுடைய பிராணி எது?
1) பல்லி. 2) நுளம்பு. 3) நண்டு. 4) நத்தை.

11. பொருட்களுக்கு விளம்பரம் செய்யப்படுவதன் நோக்கம் அல்லாதது எது?
1) புதிய பொருட்களை அறிமுகம் செய்தல்.
2) பொருளின் பாவனையை மக்களுக்கு தெரியப்படுத்தல்
3) பொருட்களின் நுகர்வை குறைத்தல்.
4) பொருட்களின் விற்பனையை அதிகரித்தல்.

12. தெற்காசிய அமைப்பில் (SAARC) அங்கத்துவம் உடைய நாடுகள் எத்தனை?
1) 07 2) 08 3) 09 4) 06

13. யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் யார்?
1) சங்கிலியன். 2) எல்லாளன். 3) பண்டாரவன்னியன். 4) இராஜசிங்கன்.

14. மின்னேரியா குளத்தைக் கட்டுவித்த மன்னன் யார்?
1) தாதுசேனன். 2) மகாசேனன். 3) பராக்கிரமபாகு. 4) வசபன்.

15. தீப்பிடித்து எரியும் ஒருவரை பாதுகாக்கும் முறை அல்லாதது எது?
1) அவரை உடனே நிலத்தில் உருள விடல்.
2) அவரின் மேல் ஈரச் சாக்கைப் போடுதல்.
3) அவரின் மேல் மணல் மண் போடுதல்.
4) காற்றோட்டமான இடத்தில் அவரை உலாவவிடல்.

16. 
இவ் வீதி சமிக்ஞை குறிப்பது,
1) இவ்வீதியால் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்லத் தடை.
2) இத்திசையில் வாகனம் செல்லத் தடை.
3) வாகனங்களை நிறுத்திவைக்கவோ, தாமதிக்கவோ, தரிக்கவோ கூடாது.
4) கட்டாயச் சுற்றுவட்டம்.

17. மின்குமிழில் நிரப்பப்பட்டிருக்கும் வாயு எது?
1) ஒட்சிசன். 2) ஆகன். 3) காபனீரொட்சைட். 4) நைதரசன்.

18. 
இவ் உருவின்படி தோன்றும் விம்பங்கள் எத்தனை?
1) 3
2) 1
3) 2
4) எண்ணற்றவை.

19. சூரியனில் இருந்து மூன்றாவதாக அமைந்துள்ள கோள் எது?
1) புவி. 2) செவ்வாய். 3) வியாழன். 4) வெள்ளி.

20. ஒரு நாட்டின் தேசிய கீதத்தின் நோக்கம் அல்லாதது எது?
1) ஒரு நாட்டின் தேசிய ஒற்றுமையை வளர்த்தல்.
2) ஒரு நாட்டின் நாட்டுப்பற்றை வளர்த்தல்.
3) ஒரு நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிக்கச் செய்தல்.
4) ஒரு நாட்டின் நன்மதிப்பை அதிகரிக்கச் செய்தல்.

21. இலங்கையில் சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகாணம் எது?
1) மத்திய மாகாணம். 2) தென் மாகாணம். 3) ஊவா மாகாணம். 4) சப்ரகமுவ மாகாணம்.

22. கம்மாலையினை வேலைத்தளமாகக் கொண்டிருப்போர் யார்?
1) தச்சுவேலை செய்வோர். 2) நகை வேலை செய்வோர்.
3) இரும்புத் தொழில் செய்வோர். 4) மேசன் வேலை செய்வோர்.

23. அருகிலுள்ள உரு குறிப்பது.
1) சிங்கம். 2) விருட்சிகம்.
3) கலப்பை. 4) மிதுனம்.



24. ஒரு சாதாரண கடிதத்தின் ஆகக்கூடிய நிறை யாது?
1) 25g 2) 30g 3) 45g 4) 50g

25. பின்வருவனவற்றுள் காந்தத்தால் கவரப்படாத உலோகம் எது?
1) நிக்கல் 2) இரும்பு 3) குரோமியம் 4) அலுமினியம்

26. பின்வரும் மூலிகைத் தாவரங்களில் தடிப்பான இலையைக்கொண்ட தாவரம் எது?
1) துளசி 2) குறிஞ்சா 3) குப்பைமேனி 4) பசளி

27. நெல் அறுவடையின்போது உள்ளீடுகள் அற்ற நெல்லை எவ்வாறு அழைப்பர்?
1) உமி 2) சப்பி 3) கோது 4) அரிசி

28. கறையானால் அதிகளவில் சேதமாக்கப்படும் மரம் எது?
1) மா 2) வேம்பு 3) முதிரை 4) தேக்கு

29. கப்பல்கள், விமானங்கள் என்பவற்றில் வரும் பயணிகளையும் பொருட்களையும் பரீட்சிக்கும் திணைக்களம் எது?
1) பொலிஸ் திணைக்களம் 2) சுங்கத்திணைக்களம்
3) ஆட்பதிவுத் திணைக்களம் 4) குடிவரவு, குடியகல்வு திணைக்களம்

கீழே தரப்பட்டுள்ள தாவரங்களின் பெயர்களை எழுதுக.






30. ........................ 31........................ 32........................ 33. ........................

பின்வரும் விளையாட்டுக்களில் ஒரு குழுவிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையை எழுதுக.







34. ........................ 35. ........................ 36. ........................ 37. ........................


38. 

வரிப்படத்தில் உள்ள பென்சிலின் நீளம் யாது? ........................

39. நோயாளி ஒருவர் ஒருவேளை 3 மாத்திரைகள் வீதம் தினமும் மூன்று வேளை உட்கொள்ள 72 மாத்திரைகளை வைத் திருந்தார். எனின், அம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானதாகும்? ........................

40. 



இவ் உருவின் சுற்றளவு யாது?
........................



41. அருகில் தரப்பட்டுள்ள இரண்டு புள்ளிகளுக்கு இடைப்பட்ட தூரம் 2cm எனின், இவ் உருவின் பரப்பளவு யாது? ........................

42. 2l 800ml அளவு உடைய குளிர்பானத்தை எத்தனை 175ml அளவுடைய சிறிய போத்தல்களில் ஊற்றலாம்?
........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


43.  இவ் உருவில் 0.25 என்பதை நிழற்றிக்காட்டுக.

..............................................

44. டினேஸ் தான் பயணம் செய்த 60km இல் 2/5 பங்கை நடந்தும், மீதித் தூரத்தினை புகையிரதத்திலும் பயணம் செய்தான். எனின், அவன் நடந்து சென்ற தூரத்தை விடக் கூடுதலாக எத்தனை km தூரம் புகையிரதத்தில் பயணம் செய்தான்?

..............................................

45. கடிகாரம் A காட்டும் நேரத்திற்கு 1.15 நிமிடங்கள் முன்னதாக உள்ள நேரத்தைக் கடிகாரம் B யில் குறித்துக் காட்டுக.





46. 150g சீனியின் விலை ரூபா 12 உம், 600g பருப்பின் விலை ரூபா 66உம் எனின், 1 1/2kg சீனியையும் 1 1/4kg பருப்பையும் வாங்கும்போது கொடுக்கவேண்டிய மொத்தப்பணம் யாது?

..............................................


47. அருகிலுள்ள கோட்டுப்படத்தில் சில நகரங்களுக்கிடையிலான தூரம் ஆங்கில எழுத்துக்களில் தரப்பட்டுள்ளது. இதன்படி A யில் இருந்து D வரை உள்ள தூரம் யாது?

..............................................




48. ஒரு பாடசாலைக்கு குறித்த ஒரு நாளில் மாணவர்கள் பயணம் செய்துவந்த வாகனங்கள் தொடர்பான விவரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| வாகனம் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|
| கார் | 48 | 53 |
| பேருந்து | 86 | 115 |
| முச்சக்கரவண்டி | 52 | 41 |
| துவிச்சக்கர வண்டி | .74 | 36 |




1) பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டியில் வந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..............................

2) பாடசாலைக்கு வாகனங்களில் வந்த ஆண்களது எண்ணிக்கைக்கும் பெண்களது எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் யாது? ..............................

3) பேருந்தில் வந்த மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒருவழிப் பேருந்துக்கட்டணமாக 7/- செலுத்தினர் எனின், பேருந்தில வருகைதந்த மாணவர்களின் ஒருவழி மொத்த பேருந்துக் கட்டணம் யாது? ..............................

4) ஒரு முச்சக்கர வண்டியில் சராசரியாக 5 மாணவர் மட்டுமே பயணம்செய்ய முடியும் எனின், ஆண் மாணவர்கள் பாடசாலை வருவதற்கு தேவையான முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை யாது? ..............................

5) பாடசாலைக்கு வாகனங்களில் வந்த ஆண்களது எண்ணிக்கையினை நிரல் வரைபில் காட்டுக.

ஒரு மாலைவேளை நானும் என் தம்பியும் வயல்வெளிக்குச் சென்றிருந்தோம். அங்கு நின்ற சில சிறுவர்கள் அழகான பட்டம் ஒன்றை வானத்தில் பறக்கவிட்டு குதூகலித்துக்கொண்டிருந்தார்கள். திடீரென பலத்தகாற்று வீசவே பட்டம் அங்குமிங்குமாகத் தடுமாறியது. சிறுவர்கள் செய்வதறியாது.............

இச்சம்பவத்தைத் தொடர்ந்து உமது வசனநடையில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. வாக்கியங்கள் ஒவ்வொன்றும் திருத்தமான எழுவாய், பயனிலைத் தொடர்புடையனவாகவும் அத்துடன் நான்கு சொற்களுக்குக் குறையாமலும இருத்தல்வேண்டும்.

49. ..............................................................................

50. ..............................................................................

51. ..............................................................................

52. ..............................................................................

53. ..............................................................................

54. ..............................................................................

இவ்வினாத்தாளின் விடைக்குறிப்புக்களும் வினாத்தாள் 18 இன் பகுதி 1 உம் அடுத்தவாரம் வெளிவரும்......

**17இன் வினாத்தாள் - I விடைக்குறிப்புக்கள்**

01-3, 02-1, 03-3, 04-2, 05-2, 06-3, 07-2, 08-1, 09-2, 10-3,
11-2, 12-3, 13-583, 14-42, 15-16, 16-2, 17-3, 18-1, 19-3,
20-2, 21-2, 22-3, 23-1, 24-2, 25-1, 26-3, 27-1, 28-1, 29-1,
30-3, 31-3, 32-2, 33-1, 34-3, 35-2, 36-17, 37-2, 38-3, 39-3,
40-2.

**ஆக்கம்:-**
**ஆசிரியர் திரு.எஸ்.தீபன்.**
**வவுனியா.**

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க.
021-2229944 / 071-6850005 / 071-4273035.





அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர்.
அவர்கள் உதயனுக்கு வருகை தந்திருந்தபோது எடுக்கப்பட்ட படம்.




சர்வதேச லயன்ஸ் கழகம் (306 A2) அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழிமூலம் நடத்திய எயிட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான கட்டுரைப் போட்டியில் நவாலியைச் சேர்ந்த மாணவி செல்வி ஆன் மரினா தியோடர் முதலாம் இடத்தைப் பெற்று 10 ஆயிரம் பணப்பரிசினையும், சான்றிதழ் மற்றும் தங்க விருதினைப் பெற்றுக் கொண்டார்.
மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.கருணாசேகரவிடம் இருந்து அவற்றைப் பெறுவதனைப் படத்தில் காணலாம்.
மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ்.இராமசந்திரனும் படத்தில் காணப்படுகிறார்.
*(படம்: இரா -சுதா)*



சண்டிலிப்பாய் குடும்ப முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் கல்வளை பாரதி முன்பள்ளி மாணவர்களின் "இசைவும் அசைவும்" நிகழ்வு நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். *(படம்: ஐங்கரன்)*



கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் சுவாமி விவேகானந்தரின் ஆளுமை பற்றிய கருத்தரங்கு அதிபர் வல்லிபுரம் நடராசா தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கருத்துரை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org